THE MADRAS LEGISLATIVE COUNCIL.

Wednesday, the 6th March 1968.

The House met in the Council Chamber, Fort St. George, at three of the clock, Mr.Chairman (THE HON. THIRU M.A. MANICKA-VELU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

Dramas

*181 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether permission of the Government has to be obtained for staging dramas ;

(*b*) whether the dramatic scripts are censored ;

(*c*) the places in Tamilnad where permission was refused for staging dramas from 1st March 1967 to 31st August 1967 ; and

(*d*) the reasons therefor ?

நாடகங்கள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நாடகங்கள் நடத்த சர்க்காரின் அனுமதி பெறவேண்டுமா ?

(ஆ) நாடக வசனங்கள் தணிக்கை செய்யப்படுகின்றதா ?

(இ) 1967-ம் ஆண்டு மார்ச் மாதம் 1-ம் தேதியிலிருந்து ஆகஸ்டு மாதம் 31-ம் தேதி வரை தமிழகத்தில் எங்கெங்கு நாடகம் நடத்த அனுமதி மறுக்கப்பட்டது ?

(ஈ) அதற்கான காரணங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (on behalf of the Hon. the Chief Minister) : (அ), (ஆ), (இ) and (ஈ) நாடகம் ஒன்றை நடத்துவதற்கு அனுமதி ஏதும் தேவையில்லை. ஆனால் ஏதேனும் ஒரு நாடகம் ஆட்சேபிக்கப்படுவதற்குரியதென மாவட்டத்தில் உரிமம் வழங்கும் அதிகாரியாகிய கலெக்டரும் சென்னை மாநகரில் காவல் துறை ஆணையரும் கருதினால், அந்த நாடகம் நடைபெறுவதைத் தடை செய்ய அவர்களுக்கு அதிகாரமுண்டு. நாடக அமைப்பாளர், உரிமம் வழங்கும் அதிகாரியிடம் நாடகப் படியைத் தாமாகவே கொடுத்து நாடகம் ஆட்சேபனைக்குரியதல்ல என்னும் சான்றிதழைப் பெற்றுக் கொள்கிறார். 1967-ம் ஆண்டு மார்ச் மாதம் 1-ம் தேதி முதல் ஆகஸ்டு மாதம் 31-ம் தேதி வரை உள்ள கால அளவில், ஒரே ஒரு நாடகத்தில் மட்டுமே ஆட்சேபிப்பதற்குரிய பகுதி இருந்ததால் அந்த நாடகத்திற்கு மட்டும் அனுமதி மறுக்கப்பட்டது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, இந்த நாடகங்கள் நடத்துவதற்கு முன்கூட்டியே அதன் கதை, வசனம் போன்றவைகளை கலெக்டரிடம் கொடுக்கவேண்டுமா ? அதைச் சரிபார்த்த பிறகு தான் நாடகம் நடத்த அனுமதி கொடுக்கப்படுகிறதா ? ஆட்சேபனை உள்ள பகுதி எது என்று கருதப்படுகிறது ? அதை முன் கூட்டியே சொல்லி விட்டால், எழுதுபவர்கள் மாற்றி எழுதுவதற்கு வசதியாக இருக்கும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, 1954-ம் ஆண்டு சென்னை நாடக நிகழ்ச்சிகள் சட்டத்தின் 2 (1) பிரிவின்கீழ் (1) இந்தியாவில் அல்லது மாநிலம் ஒன்றில், சட்டப்படி நிறுவப்பட்ட அரசாங்கத்

தையேனும் ஒரு பகுதியில் அதன் அதிகாரத்தையேனும், கவிழ்ப்பதற்காக அல்லது கீழறுப்பதற்காக வன்முறையோ நாசவேலைகளையோ கைக்கொள்ளுமாறு ஒருவரைத் தூண்டக் கூடியதாகவோ அல்லது (2) கொலை, நாசவேலைகள் அல்லது வன்முறை பொருந்திய ஒரு குறறத்தைச் செய்யுமாறு ஒருவரைத் தூண்டக்கூடியதாகவோ அல்லது மைய அரசைச் சேர்ந்த படைகளின் தாங்கிய படைகளிலே அல்லது காவல் துறைப் படைகளிலே ஒன்றைச் சேர்ந்த ஒருவர் தமது பற்றினின்றும் அல்லது கடமையினின்றும் பிறழும்படிச் செய்யக் கூடியதாகவோ, அல்லது அத்தகைய ஒரு படையில் பணியாற்றுவதற்கு நபர்களைத் தேர்ந்தெடுத்து நியமிக்கும் பணிக்குக் குந்தகம் ஏற்படக் கூடியதாகவோ அல்லது அத்தகைய ஒரு படையின் ஒழுங்குமுறையைக் குலைக்கக் கூடியதாகவோ அல்லது இந்தியக் குடிமக்களின் ஒரு பிரிவைச் சேர்ந்தவர்களுக்கெதிராக வன்முறை செயல்களில் ஈடுபடும்படி இந்திய குடிமக்களில் வேறெருப் பிரிவைச் சேர்ந்தவர்களைத் தூண்டக்கூடியதாகவோ அல்லது இந்தியக் குடி மக்களின் ஒரு வகுப்பைச் சேர்ந்தவர்களின் சமயத்தையோ மத நம்பிக்கைகளையோ அவமதிப்பதன் மூலம் அல்லது தூற்றுவதன் அலலது இழித்துரைப்பதன் மூலம் அவ் வகுப்பினரின் மத உணர்ச்சிகளை வேண்டுமென்றே நிந்தனைக் குள்ளாக்குவதென்னும் நோக்கமுடையதாகவோ அல்லது பெரிதும் அநாகரீகமான அல்லது தூற்றுகிற சொறகள் கொண்டுள்ள அல்லது ஆபாசமான அல்லது அவதூறு சொல்லிப் பணம் பறிப்பதைக் கருத்தாகக் கொண்டுள்ளதாகவோ இருக்கக்கூடிய எந்த ஒரு நாடகமும் அல்லது ஆடல், அபிநயக் கூத்தும் ஆட்சேபகரமான நிகழ்ச்சி எனப் பொருள் படும்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, ஒரே ஒரு நாடகத்திற்கு மட்டும் ஆட்சேபனை காரணமாக அனுமதி மறுக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த நாடகம் எந்த நாடகம்? எந்த ஊரில் ஆட்சேபிக்கப்பட்டது? அந்த நாடகத்தில் எந்தக் கருத்து ஆட்சேபனைக்குரியதாக கருதப்பட்டது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பெயரைக் கேட்டாலே புரிந்து கொள்ளலாம். நாடகத்தின் பெயர் "அலறுகின்றார் அண்ணா". அந்த நாடகம்தான் ஆட்சேபிக்கபபட்டது, மாவட்ட போலீஸ் கமிஷனர் அவர்களால்?

திரு. கே. ராமதாஸ் : தலைவரவர்களே, ஒரே ஒரு நாடகத்திற்குத்தான் அனுமதி மறுக்கப்பட்டது எனறு சொன்னார்கள். சென்னை நகரத்தில் மட்டும் மூன்று நாடகங்கள் தடை செய்யப்பட்டு, அதனால், நாடகம் ஏற்பாடு மூன்றே செய்துவிட்டபடியால், நஷ்டமடைய நேரிட்டது. அரசியல் நாடகம் என்ற காரணத்திற்காக அவைகள் தடை செய்யப்பட்டது என்பதை அறிவார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, "அலறுகின்றார் அண்ணா" என்ற நாடகம் தடை செய்யப்பட்டது. அந்த நாடகத்தில் ஆட்சேபனைக்குரிய பகுதிகள் இருந்தது என்ற காரணத்தால் போலீஸ் கமிஷனர் தடை செய்துவிட்டார். அடுத்து, "கோட்டையிலே கோமான்கள்" என்ற நாடகத்திற்கு—இந்த நாடகத்திற்கு முதலில் கோட்டையிலே கோமான்கள் என்று பெயர் வைத்தார்கள். அந்த நாடகத்தை நடத்த போலீஸ் கமிஷனரை அனுமதி கேட்டார்கள். அவர் ஆட்சேபகரமான பகுதிகளைச் சுட்டிக் காட்டிய பிறகு, அதை எழுதிய நண்பர் அந்தப் பகுதி களை விலக்கிவிட்டு மறுபடியும் போலீஸ் அனுமதி பெற்று நாடகம் நடத்தி இருக்கிறார்கள்.

திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, பழைய அரசாங்கம் எத்தனை நாடகங்களை நடத்த தடை போட்டிருக்கிறார்கள்? அவை என்னென்ன?

6th March 1968]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பழைய அரசில், போலீஸ் கமிஷனர், மாவட்ட ஆட்சித் தலைவர் அன்னியில், சர்க்காரே தலையிட்டு தடை விதிக்கப்பட்ட நாடகங்கள் 21, அவையாவன :—

இரணியன்—1946-ம் ஆண்டு ஜூலை மாதம் 27-ம் தேதி ; சர்வாதிகாரி—1948-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 21-ம் தேதி , மகாத்மாவின் தொண்டன்—1949-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5-ம் தேதி ; தூக்குமேடை—1949-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 25-ம் தேதி ; சம்ஸ்கிருத தெலுங்கு நாடகம் ஒன்று—1949-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 3-ம் தேதி, புரட்சி 1949-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 27-ம் தேதி ; நல்ல முடிவு—1950-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 7-ம்தேதி ; போர்வாள்—1951-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9-ம் தேதி ; மக்கள் துரோகி—1951-ம் ஆண்டு மே மாதம் 3-ம் தேதி ; மறுமலர்ச்சி—1952-ம் ஆண்டு ஜூன் மாதம் 14-ம் தேதி ; முருகன்—1952-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17-ம் தேதி ; பணக்காரன்—1953-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14-ம் தேதி ; எமலோகத்தில் பெரியார்—1953-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14-ம் தேதி ; அன்பின் வெற்றி—1954-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 9-ம் தேதி ; அண்டி பிழைப்பு—1954-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 9-ம் தேதி ; வால்மீகி ராமாயணம்—1954-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 28-ம் தேதி ; மர்ம வீரன்—1954-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 3-ம் தேதி; போராட்டம்—1956-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 18-ம் தேதி ; உதய சூரியன்—1960-ம் ஆண்டு மே மாதம் 3-ம் தேதி.

திரு. எம். எத்திராஜுலு : உலகத் தமிழ் மகாநாட்டில் "தமிழ் எங்கள் உயிர்" என்ற நாடகம் நடத்தியபோது, அதில் மத்திய சர்க்கார் அமைச்சர்களைக் கூடத் தாக்கிப் பேசியதாக கருதப்படுகிறது. அப்படியானால் அந்த "தமிழ் எங்கள் உயிர்" என்ற நாடகம் தணிக்கை செய்யப்பட்டதா ? அப்படிச் செய்யப்பட்டு சர்க்காருக்கு ஏதேனும் குறிப்பு வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்த "தமிழ் எங்கள் உயிர்" என்ற நாடகம் எஸ். எஸ். ராஜேந்திரன் நடத்திய நாடகம். அந்த நாடகத்தில் எந்த விதமான ஆட்சேபனையும் இருந்ததாகக் கருதப்படவில்லை. உறுப்பினர் அவர்களும் கருதப்படுகிறது என்று சொல்கிறாரே தவிர, தாம் பார்த்ததாகவோ குறிப்பிட்ட இடத்தை கூட்டிக் மத்திய அமைச்சரைத் தாக்கியதாகவோ சொல்லவில்லை. எஸ். எஸ். ஆர். நடத்திய அந்த நாடகம் சமூக நாடகமல்ல. பழைய சரித்திர நாடகம்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : நாடகம் நடத்துவதற்கு முன்பே தணிக்கை செய்வதற்கு வசனங்களைத் தணிக்கை அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கவேண்டுமென்ற உத்தரவு புதிய ஆட்சி வந்த பிறகு போட்ட உத்தரவா ? அல்லது பழைய ஆட்சிக் காலத்திலிருந்த உத்தரவா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பழைய ஆட்சிக் காலத்திலிருந்து அமுலாகி வரும் உத்தரவு தான்.

திரு. கே. ராமதாஸ் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பேசில் சொல்லும்போது நாடகத்திலே இருக்கிற ஆட்சேபகரமான சொற்களை அகற்றிவிட்டால், அந்த நாடகத்தை நடத்தலாம் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் பெயரைக் கேட்டவுடனேயே ''சிங்கப்பூர் திருடன்'' என்ற நாடகத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டது தெரியுமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல மாண்புகளை உணர்ந்திருப்பவர். பண்பாடுகளை எல்லாம் உணர்ந்திருப்பவர். "சிங்கப்பூர் திருடன்" என்பது எந்த அர்த்தத்திலே பத்திரிகையில் கட்டுரையாக எழுதப்பட்டு வருகிறது என்பதை அவர் அறிவார். மனச்சாட்சியைத் தொட்டுப் பார்த்துக்கொண்டு அந்த தலைப்பு பொருத்தமானதா என்பதை அவர் எண்ணிப் பார்க்கவேண்டும். இது போல மற்றவர்களும் எழுத ஆரம்பித்தால் அப்படிப்பட்ட நாடகங்கள் வருமானால் நாடு ஒரு அமளிக் கூடமாக ஆகுமே தவிர நாடாக இருக்காது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவரவர்களே, சென்றவாரம் சூரியிற்றுக்கிழமையன்று, மவுண்ட் ரோட்டில் "சபையர்" தியேட்டரில் "முகம்மது பின் துக்ளக்" என்ற நாடகம் நடந்ததைப் பார்க்க நண்பர் ஒருவர் என்னைக் கூட்டிக்கொண்டு போனார். அதிலே அரசியல்வாதிகள் யாராக இருந்தாலும் அவர்கள் எல்லாம் அயோக்கியர்கள் என்றும், எந்த கவர்ன்மெண்ட் பதவிக்கு வந்தாலும் சுய நலத்தை முன்னிட்டுத் தான் நிர்வாகத்தை நடத்துகிறார்கள் என்ற கருத்தையும் மக்களிடையே பரப்பும் நிலையில், அந்த நாடகம் நடத்தப்படுகிறது. அதைச் சர்க்கார் கவனித்துத் தடுக்க முயற்சி செய்வார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : "முகமது பின் துக்ளக்" என்ற நாடகத்தின் விளம்பரத்தைப் பார்த்தால் அது சரித்திர நாடகம் போலத் தோன்றியது. கனம் உறுப்பினர் அந்த நாடகத்தில் எல்லா அரசியல் கட்சிக்காரர்களும் அயோக்கியர்கள் என்று சொல்லவதாகக் கூறினார். காலையில் மேல் சபையில் சொல்லும்போது, எல்லோரையும் முட்டாள் என்று சொல்லிவிட்டு, நடிக்கிற தன்னையே முட்டாள் என்று சொல்லிக்கொள்வதாகச் சொன்னார்கள். ஆகவே, அப்படி கேலிக்காக கூட குறிப்பிடும் வாசகமாக இருக்கலாம். அதைப் பற்றி ஆராய்ந்த பிறகு தான் சொல்லப்படவேண்டும்.

Misappropriation of funds

*** 182 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—**

(a) whether anybody misappropriated Rs. 5,050 in the Police Department in Madurai recently ; and

(b) if so, the action taken thereon ?

நிதி கையாடல்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சமீபத்தில் மதுரை போலீஸ் இலாகாவில் யாராவது ரூ. 5,050 கையாடல் செய்தாரா ?

(இ) ஆமெனில் அதன்மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (on behalf of the Hon. the Chief Minister) : (அ) ஆம்.

(இ) சம்பந்தப்பட்ட கருவூல நேர்முக சேவகர் வேலையிலிருந்து தள்ளப்பட்டார்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, வேலையிலிருந்து தள்ளப்பட்டது சரி, பணத்தை வசூல் செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? இத்தகைய எண்ணங்கள் அந்த இலாகாவில் வேலை செய்பவர்களுக்கு வரக் காரணமென்ன ? அதைத் தடுக்க அரசு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்த இலாகாவில் புதிதாக வந்த கருவூல நேர்முக சேவகர் **(Lance Nayak)** பெரிய கருப்பண்ணன் என்பவருக்குப் பயிற்சியளிக்க, அங்கேயிருந்த பழைய ஆள் ராஜி என்பவர் அமர்த்தப்பட்டார். அது எப்படிப்பட்ட பயிற்சி என்றால், கருவூலத்திற்குச் சென்று பணங்களை மாற்றுவதும், பாங்கிற்கு சென்று பணங்களை மாற்றுவதற்கும் ஆக போலீஸ் இலாகாவிலிருந்து அனுப்புவதாகும். அப்படி அனுப்பப்பட்ட பெரிய கருப்பண்ணனுக்கு இந்த ராஜு ஒத்தாசையாக இருந்து கொண்டிருந்தார். ஒரு நாள் இருவரும் சென்று கருவூலத்தில்

பணத்தை 32,324 ரூபாய்க்கு மாற்றினார்கள். அதிலே ராஜு என்பவர் பெரிய சருப்பண்ணனே ஏமாற்றி 27,274 ரூபாயை மாத்திரம் கொண்டு வந்து கொடுத்துவிட்டு 5,050 ரூபாயை சுருட்டிக்கொண்டார். அதற்குப் பிறகு இந்த ராஜு செய்த குற்றத்திற்காக, பயிற்சி பெற்று கொண்டிருந்த பெரிய கருப்பண்ணன் 5,050 ரூபாயை கட்டவேண்டிய நிலை ஏற்பட்டு அவரும் கட்டி விட்டார். அதற்குப் பிறகு ராஜு மீது பெரிய கருப்பண்ணன் வழக்குப் போட்டு, அந்த ராஜு தன்னுடைய குற்றத்தை ஒப்புக்கொண்டு பணத்தைப் கொடுத்துவிட்டார். இப்படிப்பட்டவர்கள் இருக்கலாமா என்று நண்பர் தியாகராஜன் கேட்டார். இந்த ராஜு என்பவர் 1961-ம ஆண்டு அக்டோபர் மாதம் 13-ம் தேதியன்று போலீஸ் கான்ஸ்டேபிள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார். அவருடைய பழைய வரலாற்றை இப்போது பார்த்தால், அவர் திருட்டுகள், கையாடல்கள் முதலியவற்றில் நிறமைசாலியாக இருந்திருக்கிறார் என்பது பிறகு தான் தெரியவந்தது.

திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, இந்த தவறுக்காக யார் யார் மீது என்னென்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதைச் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அம்மாதிரி செய்த ராஜு வேலையிலிருந்து நீக்கப்பட்டார். பெரிய கருப்பண்ணன் இந்த, குறிப்பிட்ட பிலீல மாற்ற அலுவலகத்திற்குச் செல்லத் தவறியதற்காக, அவருடைய ஊதியத்தில் இரண்டு வருடத்திற்கான படிகள் குறைக்கப்பட்டன. ராஜு வேலைக்கு வருவதற்கு முன்னால், அவருடைய நடத்தையைப் பற்றி விசாரித்து தகவல் அறிவித்த சப் இன்ஸ்பெக்டர், அவரை அறிக்கையை கொடுத்ததற்காக அவர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. மதுரை மாவட்ட அர்பன் அலுவலக மானேஜரும், அக்கவுண்டண்டும் நடவடிக்கைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

Saraswathi Mahal, Thanjavur

*** 183 Q.—THIRU N. R. THIAGARAJAN:** Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the number of books and manuscripts available in Saraswathi Mahal, Thanjavur ;

(*b*) the books available on medicine and home science ;

(*c*) the number of books that can be prescribed as text-books in schools ; and

(*d*) whether there is any proposal to prescribe them as text books in schools ?

சரஸ்வதி மகால், தஞ்சாவூர்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சை சரஸ்வதி மகாலில் மொத்தம் எத்தனை புத்தகங்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் இருக்கின்றன ?

(இ) வைத்தியம், மனை இயல் பற்றி என்ன புத்தகங்கள் உள்ளன ?

(உ) பள்ளிப்பாட புத்தகங்களாக வைக்கத் தகுதி வாய்ந்தவை எத்தனை?

(ஊ) அவற்றைப் பாட புத்தகமாக வைக்க உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) சுமார் 2,000 அச்சிட்ட புத்தகங்களும், சுமார் 40,000 கையெழுத்துச் சுவடிகளும் சரஸ்வதி மகால் நூல் நிலையத்தில் உள்ளன.

(இ) சரஸ்வதி மகால் நூல் நிலையம் வைத்தியத்தைப் பற்றி 24 புத்தகங்களும், மீனை இயலைப்பற்றி இரண்டு புத்தகங்களும் வெளியிட்டு உள்ளது.

(உ) ஒன்றுமில்லை.

(எ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, தஞ்சாவூர் சரஸ்வதி மகாலிலிருந்த புத்தகங்களைத்தான் ஜெர்மனி வரையிலும் எடுத்துக்கொண்டு போய், "ஹிட்லர் அந்தப் புத்தகங்களை வைத்துக்கொண்டு அணுகுண்டைக் கண்டுபிடித்தான்", என்று கூறப்படுகிறதே, அப்படி அங்கிருந்து புத்தகங்கள் வெளிநாடுகளுக்கு சென்றிருக்கின்றனவா ? அவர்கள் புதிதாகக் கண்டுபிடித்தவைகள் அந்தப் புத்தகத்திலிருந்து தான் என்று கூறப்படுவது உண்மையா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கூற்று சாதாரணமாகச் சொல்லப்பட்டு வருகிறதே தவிர, அதற்கு ஆதாரங்கள் இருப்பதாக தெரியவில்லை. அங்கிருந்து எந்தப் புத்தகங்களை எடுத்துச் சென்றார்கள், எப்படி அவற்றைப் பயனபடுத்தினார்கள் என்பதற்கான விவரங்கள் இல்லை. பொதுவாக மருத்துவத் துறையிலுள்ளதும் மற்ற துறையிலுள்ளவைகளிலுமுள்ள, நில பல, நுணுக்கங்கள் ஆராயப்பட்டு வருகின்றன. இப்போது கூட சித்த, ஆயுர்வேத முறையில் நில பல முறைகளைக் கையாண்டு, நவீன மருந்துகளைத் தயாரிக்கும் முறையை மேற்கொண்டிருக்கிறார்கள். சரஸ்வதி மகாலிலிருந்து கொண்டு போன புத்தகத்திலிருந்து தான் அணுகுண்டு கண்டுபிடித்தார்கள் என்று சொல்லுவதற்கு ஆதாரமில்லை.

திரு. எம். எத்திராஜுலு : பண்டைக்காலத்தில், சரபோஜி மகாராஜாவினுல் சேர்க்கப்பட்ட அந்தப் புத்தகங்களில், வைத்தியம், மீனையடி சாஸ்திரம் போன்ற புத்தகங்கள் இருக்கின்றனவா ? அதை அச்சிப்பட்டு தமிழகத்தினுள்ள எல்லா லைப்ரரிகளிலும் வைப்பதற்கு இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : முதலிலேயே கூறியபடி முக்கியமான நூல்கள் என்று கருதப்படுபவையில் 22 தமிழ் நூல்கள் மருத்துவத் துறையைப் பற்றியது. சம்ஸ்கிருதம், தமிழ், இரண்டும் கலந்த இரண்டு நூல்கள் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன. கட்டிடப் பொறியியல் பற்றிய இரண்டு நூல்கள், சம்ஸ்கிருதம், கிரந்தம், ஆகியவற்றில் உள்ள நூல்கள், பதிப்பிக்கப்பட்டன. மற்றும் நூல் நிலையங்களில் பயன்படுத்தும் வாய்ப்பு ஏற்பட்டால் அவைகளை வைக்க ஏற்பாடு செய்யப் படும்.

Thiru V. K. RAMASWAMY MUDALIYAR : I am told that many of the valuable books are slowly fading out due to efflux of time. Is there any proposal to reprint all these valuable books so as to keep them permanently as records in the Saraswathi Mahal Library ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : முதலிலே கூறியபடி கையெழுத்துப் பிரதிகள் " Mauuscript " என்பவை 22,000 மும், சுவடிகள் 18,000மும் இருக்கின்றன. மிக முக்கியமானவை, பயன் படக்கூடியவை, தேவையானவை என்பவற்றை ஆராய்ந்து பார்த்து, இப் போது 24 மருத்துவ இயல் நூல்களும், கட்டிட இயலைப் பற்றிய இரண்டு புத்தகங்களும் வெளியிட்டிருக்கிறார்கள். பதிப்பிக்கக்கூடிய வாய்ப்புள்ள பயன்படக்கூடுமென்று எதிர்பார்க்கின்ற நூல்களை பதிப்பிக்க முயற்சிகள் எடுக்கப்படும்.

THIRUMATHI LAKSHMI KRISHNAMURTHY : Sir, has anyone of these texts on medicine been submitted to the Medical Research Institute at Lucknow for research purposes ?

6th March 1968]

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பெரும்பாலான புத்தகங்கள், சுவடிகள், எல்லாம் சரபோஜி காலத்தில் சேகரிக்கப்பட்டவை. கிட்டத்தட்ட 1790-க்கும் 1800-க்கும் இடையில் அந்த நூல்கள் திரட்டப்பட்டுள்ளன. அவை இப்போதுள்ள பாடத்திட்டங்களுக்கு முழு அளவில் பயன்படக்கூடிய அளவில் இருக்காது. ஆராய்ச்சிக்குப் பயன்படும் வகையில் நூல்கள் இருக்கக்கூடும். அப்படிப்பட்ட நூல்கள், மருத்துவ நிலையங்கள் போன்றவைகளில் இல்லாவிட்டால், அங்கே வைப்பு தற்கு ஏற்பாடு செய்யலாம்.

•

Valangaiman High School

184 *Q.*—THIRU N.R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether any strike was staged by the students of Valangaiman High School, Thanjavur District, on 12th of October 1967, as a result of the teachers' misbehaviour towards girl students of that school ; and

(*b*) the steps taken by the Government thereon ?

வலங்கைமான் உயர்நிலைப் பள்ளி.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சை மாவட்டம் வலங்கைமான் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவிகளிடம் ஆசிரியர்கள் தகாத முறையில் நடந்ததாக அக்டோபர் மாதம் 12-ம் தேதி வேலை நிறுத்தம் எதாவது நடந்ததா ?

(இ) இதன்மீது சர்க்கார் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) and (இ) 1967-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 12-ம் தேதி விடுமுறை நாளானதால் இத்தகைய நிகழ்ச்சி ஏதும் நடைபெறவில்லை. அப்பள்ளி ஆசிரியர் ஒருவர் தகாத முறையில் நடந்து கொண்டதாகச் சொல்லிக் கொண்டு அவரை மாற்றும்படி கோரி, 1967-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13-ம் தேதி அன்று காலையில் மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்ல வில்லை. அங்குள்ள உள்ளூர் அதிகாரிகள் தலையிட்ட பின்னர் அன்று மாலையே மாணவர்கள் வகுப்புகளுக்குச் சென்றனர். எனினும், அந்த ஆசிரியர் பட்டுக்கோட்டைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

திரு. எம். எத்திராஜுலு : மாணவிகளிடம் ஆசிரியர் தகாத முறையிலும், ஆசிரியைகளிடம் ஆசிரியர்கள் தகாத முறையிலும், பல நிகழ்ச்சிகள் நடந்துகொண்டிருப்பதாகத் தெரிகிறது. இதைத் தவிர்க்க பெண்கள் இருக்கக்கூடிய பள்ளிகளுக்கு ஆண்களை நியமிக்காமல், அதே போல் ஆண்கள் இருக்கக்கூடிய பள்ளிகளுக்கு பெண்களைப் போடாமல், இருவரும் சேர்ந்து ஒரே பள்ளியில் பணியாற்றுமல் இருக்கக்கூடிய வகையில் சர்க்கார் எதாவது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தக் குறிக்கோள் தான் பெரும்பாலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அதை மாற்றவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கூட பல சமயங்களில் முறையிடுகிறார்கள். பி.யு.சி. அளவில் இதைக் கட்டாயமாகச் செய்யவேண்டுமென்று, தோழர் தேவர் அவர்களும் கண்டிப்போடு சொல்கிறார்கள். உதாரணமாக "அரியலூரில் பெண்கள் படிக்க வாய்ப்பில்லை ; திருச்சிக்கு அனுப்ப வேண்டிய வழியில்லை. கல்லூரியில் சேர்க்கவேண்டுமென்று" முறையிடுகிறார்கள். உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தும் கூட, பெண்கள் பள்ளி தனியாக வைத்தாலும், ஆண்கள் பள்ளிகளில் சேர்க்க பெற்றோர்கள் விரும்புகிறார்கள். கேட்டால் வீட்டு வசதி என்று

சொல்கிறார்கள். கூடுமானவரை பெண்கள் கல்லூரியிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும், ஆசிரியைகளையே பணியாற்றவேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், கூடுமானவரை மெல்ல, மெல்ல ஆண்கள் ஆசிரியர்களாக இருக்கும் இடங்களுக்கு, தக்க அளவில் பெண்கள் நிபைப்பார்களானால் அந்த இடத்தில் ஆண்களை எடுத்துவிட்டு ஆசிரியைகளை போட வேண்டுமென்றும் உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

THIRU K. S. ABDUL WAHAB: May I know the number of High Schools in which co-education is in existence in our State?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அதற்குத் தனி கேள்வி போடவேண்டும். கூடுமானவரை நாளுக்கு நாள் குறைக்கப்பட்டு வருகிறது.

Cement Factories

*185 Q.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the number of cement factories for which licences were issued during 1966–67 in Madras;

(*b*) among them, how many factories have started production; and

(*c*) the reasons for other factories not doing so?

சிமெண்டு தொழிற்சாலை

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் அவர்கள் மேற்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1966–67-ல் தமிழகத்தில் எத்தனை சிமெண்ட் தொழிற்சாலைகள் அமைக்க உரிமை வழங்கப்பட்டன?

(இ) இவற்றில் எத்தனை உற்பத்தி தொடங்கின?

(உ) மற்றவை உற்பத்தித் தொடங்காததற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்: (அ) 1966–67-ல் தமிழகத்தில் சிமெண்ட் தொழிற்சாலைகள் அமைக்க உரிமம் ஒருவருக்கும் வழங்கப்படவில்லை.

(இ) and (உ) கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன்: இதற்கு முன்னால் அனுமதி வழங்கப்பட்டவைகளில் வேலை ஆரம்பிக்கப்பட்டுவிட்டதா? எத்தனை பேருக்கு அனுமதி வழங்கப்பட்டது? முந்தைய அரசில் யாருக்கு வழங்கப்பட்டது? அவற்றில் வேலை ஆரம்பிக்கப்பட்டுவிட்டதா? அவை எத்தகைய நிலையில் இருக்கின்றன.?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்: ஏற்கெனவே இருந்த சிமிண்ட் தொழிற்சாலைகள் விரைவு படுத்தக் கோரி விண்ணப்பம் போட்டு அந்த முயற்சிகள் பேரில் நான்கைந்து தொழிற்சாலைகள் நடைபெற்று வருகின்றன. அது தவிர, ஆலங்குளத்தில் அரசினர் சார்பில் வைக்கப்பட்டிருக்கிற தொழிற்சாலையில் வேலை நடைபெற்று வருகின்றன. ஏற்கெனவே இந்தியா சிமிண்ட் லிமிடெட், சங்கர் நகர், திருநெல்வேலி மாவட்டத்தில் தொழில் நடக்கிறது. சங்கரிதுர்க்கத்தில் சேலத்தில் ஏற்கெனவே உற்பத்தி செய்துவருகிறது. டால்மியா சிமிண்ட், டால்மியாபுரம், திருச்சி மாவட்டம், எ. சி. சி. மதுக்கரை, கோயமுத்தூர் ஜில்லாவில் உற்பத்தி நடைபெறுகிறது. மெட்ராஸ் சிமிண்ட், ராஜபாளையம், ராமநாதபுரம் ஜில்லாவில் உற்பத்தியாகிறது. எ. முத்தையா செட்டியார், கரூருக்கு

6th March 1968]

பக்கத்தில் இடம் பார்க்கப்பட்டு அதற்கான மிஷினரிகளுக்கு ஆர்டர் கொடுக்கப்பட்டு வருகின்றன. கட்டிடங்கள் வேலை நடைபெற்று வருகின்றன. உற்பத்தி செய்யும் சூழ்நிலைக்கு இன்னும் வரவில்லை. அரசாங்கத்தின் சார்பாக சோழபுரத்தின் அருகில்வைக்கப்பட்டதான தொழிற்சாலைக்கு அடிப்படை வேலைகள் நடைபெறுகின்றன. மிஷனரிகள் வரவேண்டும். வந்து சேர்ந்ததற்குப் பிறகு உற்பத்தி தொடங்கும். சர்க்கார் சிமிண்ட் தொழிற் சாலைகள் சிறிய அளவில் வைப்பதற்கு ஒன்பது இடங்களில் வைக்கலாம் என்று கருதி, கயத்தார், அம்பாசமுத்திரம், சண்ணும்பூர் போன்ற இடங்களுக்கு தனியார் ஆரம்பிக்க முன் வந்து எற்பாடுகள் நடைபெறுகின்றன.

திரு என் ஆர். தியாகராஜன்: முன்பு தொழிலமைச்சராக இருந்த வெங்கட்ராமன் அவர்கள் இங்கே பேபி (சிறு) சிமிண்ட் தொழிற்சாலைகள் ஆரம்பிக்க திட்டமிருப்பதாகக் கூறினார்கள். அப்படி எத்தனை ஆரம்பிக்கப் பட்டன ? ஒரு நாளைக்கு அவை எவ்வளவு உற்பத்தி செய்கிறது ? ஆரம்பிக்க மூலதனம் எவ்வளவு தேவைப்படும் ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : ஒன்பது இடங்களில் சிறிய தொழிற்சாலைகள் வைக்கலாமென்று உத்தேசித்து, கயத்தாரில் 4 மில்லியன் டன் உற்பத்தி செய்யும் அளவுக்கு அங்கே பொருள் கிடைக்கு மென்று தெரிகிறது. அம்பாசமுத்திரத்தில் 5 முதல் 6 மிலியன் டன் கிடைக்கும். அதில் பாதி சிமிண்டுக்குப் பயன்படும். சண்ணும்பூரில் 1.4 மிலியன் டன் கிடைக்கலாம். அரியலூர்-செட்டிபாளையத்தில் 2.50 லட்சம் டன் கிடைக்கும். கையிலரூபாத்-அமினுபாத் பகுதியில் 17 மிலியன் டன் கிடைக்கும். சமால்பட்டியில் 7.5 லட்சம் டன் வேம்ஸ்டோன் கிடைக்கும். வானையாரில் 3 மிலியன டன் கிடைக்கும். கேத்துப்பட்டும் பாண்டிச்சேரி அருகில் 3.5 மிலியன டன்னும் கிடைக்கும். அளவிற்கு இருக்கிறது. சிந்தாமணிப்பட்டி- குளித்தலைக்கு அருகில் 2.75 மிலியன் டன் கிடைக்கும்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, சமீபத்தில் சிமிண்ட் கிடைக்காத நிலையில் இருந்த அது இப்போது சர்க்காரின் கொள் கையினாலும், மற்றும் கட்டிட வேலைகள் அதிகமில்லாமல் செலவு குறைக் பட்டதாலும், தொழிற்சாலைகளில் சிமிண்ட் அதிகமாகத் தேங்கியிருப்பதாகத் தெரிகிறது. அது சர்க்காருக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அதுபற்றிய முழு விவரம் இல்லை. தனிக்கேள்வி போடவேண்டும்.

Allotment of Motor-cars

***186 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Works be pleased to state :—**

(*a*) the names of M.L.Cs., M.L.As., and M.Ps. from Madras, who were allotted motor-cars, from out of the State Government quota, from 2nd October 1964 to 30th September 1967 ; and

(*b*) the names of M.L.As., M.L.Cs. and M.Ps., from this State who were not allotted motor-cars ?

சட்டமன்ற, சட்டப்பேரவை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மோட்டார் வண்டிகள்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) 1964-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் தேதி முதல் 1967-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30-ம் தேதி வரை சட்டமன்ற, சட்டசபை, பாராளுமன்ற சென்னை உறுப்பினர்கள் ஆகியவர்களுக்கு யார் யாருக்கு மோட்டார் வண்டிகள் தமிழக அரசு பங்கீட்டிலிருந்து வழங்கப்பட்டன ?

(இ) மனுச் செய்துகொண்ட எம்.எல்.ஏ., எம்.எல்.சி., எம்.பி.க்களில் யாரியாருக்குக் கொடுக்கப்படவில்லை ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : பேரவைமுன் விவரப் பட்டியில்a ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஏன். ஆர். தியாகராஜன் : இந்த அறிக்கையின்படி 56 பேர்களுக்கு கார் வழங்கப்பட்டிருக்கிறது. 41 பேர்களுக்கு வழங்கப்படவில்லை. வழங்கப்படாதவர்களில் நானும் ஒருவன். 56 பேர்களில் 19 பேர்களுக்கு எனக்குத் தெரிந்தவரையில் எதிர்க்கட்சிக்காரர்களுக்குத் தான் கொடுக்கப் பட்டிருக்கின்றன. எனக்குப் கார் கொடுக்கவேண்டுமென்று, உத்தரவு இடுமாறு கேட்ட சமயத்தில் எனக்குக் கொடுக்காமல் ப. உ. ஷண்முகம், அன்பழகன், ஆகியோருக்குக் கொடுக்கவேண்டுமென்று சொல்லி அவர் களுக்குக் கொடுத்தார்கள். வற்புறுத்திக்கொண்டேன். இப்போது, ஆளும் கட்சியாக வந்திருக்கிறீர்கள். எதிர்க்கட்சியினருக்கு நாங்கள் காட்டிய அந்தச் சலுகையை நீங்கள் காட்டுவீர்களா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : இன்னும் அவர் கேட்கவில்லையே என்று கவலைப்பட்டுக்கொண்டிருந்தேன். கேட்டால் கொடுக்கப்படும்.

திரு. சி. வி. ராஜகோபால் : ஒவ்வஞ்னையில்லாமல் கார் வேண்டு மென்று கேட்கிற உறுப்பினர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு, யோக்கியதை இருக்கிறதோ இல்லையோ, அதைப்பற்றிக் கவலைப்படாமல் தரப்படுமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : தரப்படும். ஆனால் அவர் அதை வாங்கிவிடவேண்டும்.

திரு. எம். எத்திராஜலு : அவரவர்களுடைய தொகுதியை உறுப்பினர் கள் சுற்றிப்பார்க்கவேண்டுமென்ற அடிப்படையில், அவர்களுக்குக் கார் வேண்டுமென்று தரப்படுகிறது. அதில் வசதி உள்ளவர்களும் இல்லாதவர் களும் இருக்கிறார்கள். அதையொட்டிச் சட்டசபை அங்கத்தினர்களுக்கு சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுப்பதைப் போல் கடன் தொகை கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : அப்படிக் கொடுப்பது கடன் அல்ல. சர்க்காரின் கடன் அல்ல. அதாவது கடமை அல்ல.

Motor, Lorry and Scooter Accidents.

187 *Q.*—THIRU **N. R. THIAGARAJAN** : Will the Hon. the Minister for Works be pleased to state :—

(*a*) the number of (1) motor, (2) lorry, and (3) scooter accidents which took place in the Madras State from 6th March 1967 to 1st June 1967 ;

(*b*) the number of fatal cases among them, category-wise ; and

(*c*) whether any compensation was paid to the families of the deceased ?

a Printed as Appendix on pages 418-420

6th March 1968]

மோட்டார், லாரி, ஸ்கூட்டர் விபத்துக்கள்.

***திரு. என்: ஆர். தியாகராஜன் :** மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் : —

(அ) 1967-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 6-ம் தேதி முதல் ஜூன் மாதம் 1-ம் தேதி வரை தமிழகத்தில் நிகழ்ந்த (1) மோட்டார் வண்டி (2) லாரி (3) ஸ்கூட்டர் விபத்துக்கள் எத்தனை ?

(இ) அவற்றில் மரண விபத்துக்கள் தனித்தனியே எத்தனை ?

(உ) இவ்விபத்தால் மாண்டவர்களின் குடும்பங்களுக்கு நட்ட ஈடு ஏதேனும் கொடுக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) தமிழ்நாட்டில் 6—3—1967 முதல் 1—6—1967 வரையிலுள்ள காலப்பகுதியில் கீழ்க்கண்டவை குறித்து ஏற்பட்ட விபத்துக்களின் எண்ணிக்கை வருமாறு :—

1.	பேருந்துகள்	469
2.	சரக்கு பேருந்து	628
3.	ஸ்கூட்டர்கள்	93
(இ)	பேருந்து விபத்தினுல் மரணமடைந்தவர்கள்.	126
	சரக்கு பேருந்துகள் விபத்தினுல் மரண மடைந்தவர்கள்.	140
	ஸ்கூட்டர் விபத்தினுல் மரணமடைந்தவர்கள்	7

(உ) மோட்டார் வண்டி விபத்துக்கள் கோரிக்கை நடுவர் மன்றம் மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு அளிக்கிறது. காப்புறுதிக் கம்பெனிகளும் மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு நேரடியாக இழப்பீடு அளிக்கிறது. வழங்கப்பட்ட தொகைகள் குறித்து அரசாங்கத்திடம் இப்போது விவரம் எதும் இல்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, ஸ்கூட்டர்களில் செல்பவர்களுக்குத் தொப்பி அணிய வேண்டுமென்று சொல்லப்பட்டது. அது என்னவானது ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி அது இன்னும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அதுபற்றி பொது மக்களின் அபிப்பிராயம் கோரப்பட்டு, அதை அரசாங்கம் ஆராய்ந்துகொண்டிருக்கிறது.

திரு என். வி. நடராசன் : தலைவரவர்களே, 6-3-67-லிருந்து 1-6-67 வரை விபத்திற்குள்ளான சர்க்கார் பஸ்கள் எத்தனை ? அதே சமயத்தில் பழைய சர்க்கார் இருந்தபோது எத்தனை விபத்துக்கள் ஏற்பட்டன என்பதை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : விபத்துக்களுக்கும், அவ்வப்போது இருக்கிற சர்க்காருக்கும் சம்பந்தமில்லை. என்றுலும் இருக்கின்ற பட்டியல்படி 6-3-67-லிருந்து 1-6-67 வரை தமிழ்நாடு அரசாங்கப் போக்கு வரத்தில் ஏற்பட்ட விபத்துக்கள் 184. அதே போல 6-3-66-லிருந்து 1-6-66 வரை ஏற்பட்ட விபத்துக்கள் 228.

திரு எம். எத்திராஜலு: இப்போது பெருவாரியாக தமிழகத்தில் லாரியினுல்தான் அதிகமான விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஒரு தடவை விபத்திற்கான லாரியே மறுபடியும், இரண்டாவது தடவையும், மூன்றுவது தடவையும் விபத்துக்குள்ளானவது சர்வ சாதாரணமாகிவிட்டது. அதைத் தடுக்க, ஒரு தடவை விபத்திற்குள்ளானுல், அந்த வண்டி மறுபடியும் விபத்திற்கு ஆளாகுமானுல், அந்த லாரியை இரண்டு வருட காலத்திற்கு ஓடாமல் அந்தப் பர்மிட்டை சஸ்பெண்ட் செய்ய அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : லாரி உரிமையாளர்களுக்கும், விபத்துக்களுக்கும் சம்பந்தமில்லை. அது லாரிகளை ஓட்டுகிற ஓட்டுனர்கள், அதாவது டிரைவர்களைப் பொறுத்த விஷயம்.

திரு கே. ராமதாஸ்: குறிப்பாக லாரி விபத்துக்கள்தான் அதிகமாக இருக்கின்றன. நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கூட சமீபத்தில் ஒரு விபத்திற்கு ஆளாகியிருக்கிறார். டிரைவர்கள் உபயோகிக்கும் accelerator கள் நல்ல " கண்டிஷனில் " டி.வி.எஸ். வண்டிகளில் வைக்கப்பட்டிருக்கின்றன. அதே போன்ற நிலைமை எல்லா லாரிகளுக்கும் இருந்தால் சுலபமாக இருக்கும். விபத்துக்களும் குறையும். ஆகவே, அதற்கான திட்டம் எற்படுத்த சர்க்கார் முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : டி.வி.எஸ். பஸ்வீற்கு வைத்து இருப்பதை, அதாவது சட்டத்திற்குள் நிர்ணயிக்கப்பட்ட வேகத்தை மீறி கார் ஓட்டினால் அதைச் காட்டிக் கொடுப்பதற்கான கருவி பொருத்தப்பட்டு இருப்பதைப் போல நம்முடைய அரசாங்கப் போக்கு வரத்து பஸ்களில் வைக்க யோசித்துக்கொண்டிருக்கிறோம். மற்ற லாரிகளுக்கும் வைக்க வேண்டுமானால் உத்தரவாகத்தான் போட வேண்டும்.

திரு. பி. வி. ராசகோபால் : இந்த ஸ்கூட்டர்களில் குடும்பத்தோடு செல்கிறார்கள். மனைவியையும், குழந்தைகளையும்குட்டிகளையும் அழைத்துக் கொண்டு போகிறார்கள். அதனால் விபத்திற்கு ஆளாகும்போது எல்லோரும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, குழந்தைகளையும், குடும்பத்தையும் காப்பாற்ற வேண்டியாவது, ஸ்கூட்டர்களில் அவர்கள் மட்டும்தான் செல்ல வேண்டும், குடும்பத்தை அழைத்துச் செல்லக் கூடாது என்று சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : பாதுகாப்பிற்காகத் தொப்பி போட வேண்டுமென்று சொல்லும்போதே எதிர்ப்பு வரும்போது, இதைக் கட்டுப் படுத்த முடியுமா என்பது பற்றி யோசிக்க வேண்டும்.

THIRUMATHI LAKSHMI KRISHNAMURTHY : Will the Government see that all the lorry drivers are changed every six hours and alternative drivers provided ? I believe that statue provides for it, and I do not know whether this is carried out actually.

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : அப்படித்தான் சொல்லப்பட்டிருக்கிறது. வழிப்ப முறையில் டிரைவர்கள் வைத்திருந்தால், களைப்பில்லாமல் ஓட்ட முடியும். உரிமையாளர்கள் பாதுகாப்பாக இருந்து கவனிப்பு கொடுத்து வந்தால், நாட்டின் நலன் கருதி விபத்துக்களைத் தடுக்க முடியும்.

Palayamkottai Tourist Bungalow

188. *Q.*—THIRU N.R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Works be pleased to state :

(*a*) whether the rent for the tourist bungalow in Palayamkottai, Tirunelveli district was reduced recently ; and

(*b*) if so, whether there is any proposal to reduce the rent for tourist bungalows in other places likewise ?

பாளையங்கோட்டை சுற்றுலாப் பெருமாளிகை.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) திருநெல்வேலி மாவட்ட பாளையங்கோட்டை சுற்றுலாப் பெருமாளிகையின் வாடகை அண்மையில் குறைக்கப்பட்டதா ?

(இ) ஆமெனில், வேனய இடங்களிலுள்ள சுற்றுலாப் பெருமாளிகை யின் வாடகையையும் இதைப் போன்று குறைக்கும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : பாளையங்கோட்டையில் மட்டும் சுற்றுலா மாளிகையில் சார்ஜ் குறைக்கப்பட்டிருக்கிறது. மற்ற இடங்களில் குறைக்கா மல் இருப்பதற்குக் காரணம் என்ன ? மற்ற இடங்களிலும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்த யோசனை பரிசீலிக்கப்படும்.

THIRUMATHI LAKSHMI KRISHNAMURTHY : On the Southern Trunk Road, there are quite a few tourist bungalows, but most of the time, they are found occupied by officials and are not available for others for having their lunch. There are no facilities there like wash rooms and dining rooms. Will the Government, specially in the interest of tourism, see that one wash-room and one dining room are kept at the disposal of the tourist ? They may be charged a nominal fee.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதில் தங்குவோருக்கான வரிசைப் பட்டியல் இருக்கிறது. அந்த வகையில் அமைச்சர்களும் மற்றவர்களும் தங்கிக்கொண்டிருக்கிறார்கள். அம்மையார் கூறிய யோசனை பரிசீலனைக் குரியது.

திரு. கே. ராமதாஸ் : வாடகையைக் கட்டுப்படுத்துவதைப் போன்று மற்றொன்றும் செய்ய வேண்டும். சுற்றுலா மாளிகைகளில் உள்ள சிற் றுண்டிச் சாலைகளில் கொடுக்கப்படும் பகல் உணவு ஒன்றுக்கு ரூ. 7½ கட்டணம் வசூலிக்கப்படுகிறது. விலைவாசி ஏறும் என்று அதற்குக் கார ணம் சொன்னாலும் கூட சுற்றுலா செல்கிறவர்களுக்குக் குறைந்த விலையில் உணவு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : உறுப்பினரைப் போன்றவர்கள் தங்கும்போது, மற்றவர்கள் அவர்களுக்குச் சாப்பாடு போட்டுவிடுவார்கள். ஆகவே அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை.

Price of paddy

*189 *Q.*—**THIRU N. R. THIAGARAJAN :** Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the reasons for fixing the price of paddy at a rate lower than Rs. 45 per quintal in Madras when it was fixed as Rs. 56–25 in Bihar, Kerala, Uttar Pradesh, West Bengal, and Madhya Pradesh; and

(*b*) whether by way of incentive the Madras Government propose to increase the price of paddy ?

நெல் விலை.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) பீஹார், கேரளம், உத்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம், மத்தியப் பிரதேசம், ஆகிய மாநிலங்களில் குவிண்டால் நெல் விலை ரூ. 56.25 ஆக நிர்ணயித்துள்ளபொழுது, தமிழகத்தில் ரூ. 45–க்கும் குறைவாக நிர்ணயித்த காரணம் என்ன ?

(இ) தமிழக அரசு விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் நெல் விலையை அதிகரிக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) பீகார், கேரளம், உத்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம், மத்தியப் பிரதேசம், ஆகிய மாநிலங்கள் தரமான நெல் ரகங்களுக்கு குவின்டால் ஒன்றுக்கு ரூ. 56.25 ஆகக் கொள்முதல் விலைகளை வரையறுத்துள்ளன என்று கூறுவது சரியல்ல. உண்மையில் 1967-68-ம் ஆண்டுக் காலத்திற்கென உற்பத்தியாளர்களிடமிருந்து நெல் கொள்முதல் செய்வதற்காக, வேளாண்மை விலைகள் ஆய்வு ஆணைக்குழுவினால் இந்த மாநிலங்களுக்குப் பரிந்துரைக்கப்பட்ட விலைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

மாநிலங்கள்.	1967-68-ம் ஆண்டிற்கு உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்வதற்காக, வேளாண்மை விலைகள் ஆய்வு, ஆணைக்குழு பரிந்துரை செய்த விலைகள்.
(1)	(2)
	ரூ.
1. பீஹார் (குவிண்டால் ஒன்றுக்கு)	46
2. கேரளம் (குவிண்டால் ஒன்றுக்கு)	46
3. உத்திரப் பிரதேசம் (குவிண்டால் ஒன்றுக்கு).	43
4. மேற்கு வங்காளம் (குவிண்டால் ஒன்றுக்கு)	46
5. மத்தியப் பிரதேசம் (குவிண்டால் ஒன்றுக்கு)	44

கேரளத்தில், வேளாண்மை விலைகள் ஆய்வு ஆணைக்குழு பரிந்துரை செய்த வீதத்தை விட மிக உயர்ந்த வீதத்தில் நெல் விலைகள் வரையறுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் வேளாண்மை விலைகள் ஆய்வு ஆணைக் குழு பரிவுரை செய்ததற்கேற்ப, 1967-68 பருவ காலத்தில், மட்ட ரக நெல்லுக்கு குவின்டால் ஒன்றின் விலை ரூ. 43 ஆக இருக்க வேண்டும் என்று இந்திய அரசு கருத்துரை தெரிவித்தது. மற்ற நெல் வகைகளுக்கும் அவற்றின் தர வேறுபாடுகளுக்கிணங்க விலையை மாற்றி அமைக்குமாறு கூறியது. நன்கு ஆலோசனை செய்த பிறகு, இந்த அரசாங்கம் 15-8-67-லிருந்து நெல்லிற்குக் கீழ்க்கண்ட பேரளவு விலைகளை வரையறுத்துள்ளது :

சிறந்த ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 48.

நடுத்தர ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 45.

மட்ட ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 43.

(இ) அரசாங்கம் தற்போது வரையறுத்துள்ள விலைகள் உற்பத்தியாளர்களுக்குப் போதுமான வருமானத்தை அளிக்கும் என்று கருதப்படுவதால், விலைகளை மேலும் உயர்த்துவதற்கான செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை. விலைகளை மேலும் உயர்த்துதல், பயன் கொள்வோர் அதன் விளைவாக அரிசிக்கு அதிகமான விலை கொடுக்க வேண்டி வரும்.

தமிழகத்தில் அதிகமாகத்தான் கொடுப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால் கேரள கொள்முதல் கொள்கையை இந்த அரசு ஏற்றுக்கொள்வதற்கில்லை. அங்கே நிலப் பிரபுக்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் உள்ள கொள்முதல் திட்டம் இந்த அரசிற்கு உடன்பட்டதல்ல. வேளாண்மை ஆய்வுக் குழுவின் பரிந்துரைப்படி இந்திய அரசின் ஆலோசனையின் அடிப்படையில் ஆகஸ்ட் 15-ம் தேதி முதல் ரூ. 43, 45, 48 என்ற அளவில் விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவது கேள்விக்குப் பதில் என்னவென்றால், விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக விலையை உயர்த்த வேண்டுமென்று இந்த அரசு கருதவில்லை. விவசாயிகளுக்கு உரங்கள், பூச்சி மருந்துகள் கொடுக்கிறோம். கடன்கள் வழங்குகிறோம். அவற்றின் மூலமாகவெல்லாம் அவர்களுக்கு இந்த அரசு உற்சாகமளித்து வருகிறது.

6th March 1968]

திரு. என். ஆர். தியாகராஜன் : சர்க்காரிலிருந்து வாய்க்கால் மூல மாகத் தண்ணீர் கொடுக்கும் பகுதிகளுக்கு வீலையை எப்படி நிர்ணயித் தாலும் பரவாயில்லே. ஆனல், கிணற்றின் மூலமாகத் தண்ணீர் இறைத்து விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு, இதே வீலை கொடுக்கப்படுகிறது. அது அவர்களுக்குக் கட்டுபடியாகாததால், கரும்பு, மிளகாய் போன்ற பயிர் களே விவசாயம் செய்வதற்குப்போய்விடுகிறார்கள். ஆகையால் கிணற்று நீர் மூலம் விவசாயம் செய்கிற விவசாயிகளிடம் கொள்முதல் இவ்வீல என்று இந்த சர்க்கார் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் உறுப்பினர் கருத்து முற்றிலும் தவருனது. இந்த அரசாங்கம் 20 சத வீதம்தான் கொள் முதல் செய்கிறது. அந்த அடிப்படையான விஷயத்தைக் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். நம்முடைய வீளைச்சல் 40 லட்சம் டன் என்றுல் அதில் எட்டு லட்சம் டன்தான் கொள்முதல் செய்கிறோம். எக்கருக்கு இப்போது 20 மூட்டை வீளைகிறது. அதில் நான்கு மூட்டைகளே நாம் வீலைக்கு வாங்குகிறோம். மீதியுள்ள 16 மூட்டைகளை அவர்கள் வேறு வீலைக்கு விற்கிறார்கள். வீலைவாசிக் கட்டுப்பாட்டின் முக்கியமான அம்ச மாக இந்த உணவுப் பொருள் வீலைகளைக் கட்டுப்படுத்த வேண்டியிருக்கிறது. அதனுல் பிளானிங் கமிஷன் கொண்டிருக்கிற அடிப்படையான அம்சத்தை வீலைவாசிக் கட்டுப்பாட்டு வேலேயை இந்தத் தமிழக அரசாங்கம் நல்ல முறையில் செய்து வருவதாகத்தான் கருதுகிறது. விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் வீலை மிகவும் நியாயமானது என்பதில் மிகத் தெளிவாக இந்த அரசாங்கம் இருக்கிறது.

திரு. பி. எதிராஜ் : தஞ்சை ஜில்லாவில் விவசாயிகளுக்குக் கொடுக்கப் படும் கொள்முதல் வீலை நியாயமில்லை என்று ஆயிரக்கணக்கான விவசாயி கள் நாகப்பட்டினத்தில் ஊர்வலமாக வந்து கலெக்டரிடம் மனு கொடுத் திருக்கிறார்கள். தூதுக் குழுவாக வந்து அமைச்சரிடம் கோரிக்கை தெரி வித்திருப்பதாகவும் தெரிகிறது. ஆகையால் அந்த வீலை அதிகப்படுத்தும் பிரச்சினையை மீண்டும் அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் உறுப்பினர் இதைப் பிரச்சாரத்திற்கு வேண்டுமானுல் சொல்லிக்கொண்டே யிருக்கலாம். எனக்கு இன்று காலே 11 மணிக்கு தஞ்சையிலிருந்து கிடைத்திருக்கிற தகவல்படி சிலர் வீலை குறைவாக இருப்பதாகச் சொல்கிறார்கள் என்று தெரிகிறது. ஒரு மாதத்திற்கு முன்பு கலெக்டர்கள் மகாநாடு கூட்டி, ஐந்து மாதங்களுக்குள்ள 5 லட்சம் டன் கொள்முதல் செய்ய வேண்டு மென்று முடிவு செய்யப்பட்டது. அது வெற்றிகரமாக நடந்திருக்கிறது என்பதைப் பெருமையோடு இந்தச் சபையில் நான் சொல்ல முடியும். இன்றைக்கு ஒன்றரை மாத காலத்திற்குள் 2,69,274 டன்கள் கொள் முதல் செய்யப்பட்டிருக்கின்றன. அதற்காகத் தஞ்சை மாவட்ட மக்களுக்கு நான் நன்றி சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நாலாம் தேதி முடிய 1,48,758 டன்கள் கொள்முதலுக்குக் கொடுத்திருக்கிறார்கள். சர்க்கார் கொடுக்கும் வீலை நியாயமானது என்ற உறசாகத்தோடு விவசாயி கள் ஒத்துழைத்திருக்கிறார்கள். அதிகாரிகளும் இந்தக் குறுகிய காலத்தில் இரண்டு லட்சத்திற்கு அதிகமான டன்கள் நெல் கொள்முதல் செய்திருக் கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் சில பகுதிகள் திருத்துறைப்பூண்டி, பட்டுக்கோட்டை, அரந்தாங்கி போன்ற சில பகுதிகள்தான் பாதிக்கப்பட்டிருக் கும். இருந்தாலும் அதிக அளவுக்கு கொள்முதலுக்கு கொடுத்திருக் கிறார்கள்.

திரு. எம். எத்திராஜுலு : தென்னர்க்காடு மாவட்டத்தில் ஒரு ஏக்கர் பயிர் செய்வதற்கு ரூ. 400 முதல் 450 வரையில் செலவு ஆகிறது. மாவட்டத்திற்கு மாவட்டம் இந்த விவசாயச் செலவு கூடியும், குறைந்தும இருக்கிறபடியால் ஆங்காங்கு ஆகின்ற செலவைப் பொறுத்து வீலைகளை நிர்ணயிப்பதற்கு அரசாங்கம் உத்தேசிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்தப் பிரச்னையை அரசியலுக்குத்தான் பயன்படுத்துகிறார்கள் என்று திரும்பத் திரும்ப சொல்லியாகிவிட்டது. ஒரு எக்கரில் இப்போது எடிடி போன்ற விதைகள் போடுவதன் மூலம் 30 மூட்டை அளவில் உற்பத்தியாகிறது என்று சொல்கிறார்கள். உர வகைகள், பூச்சி மருந்துகள் இன்னும் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. தஞ்சை ஜில்லாவில் நீர்த் தீர்வையினால் பாதிக்கப்படுகிறார்கள் என்று கருதி 40 லட்சம் ரூபாய் வரையுள்ள அந்த வரியை வஜா செய்திருக்கிறோம். ஆகையால் உறுப்பினருக்கு மட்டும்தான் விவசாயிகளிடம் அக்கறை இருக்கிறது என்று கருதத் தேவையில்லை. அரசாங்கம் அந்த நச்சு வட்டத்தில் சிக்கி விடக்கூடாது என்பதில், தன் பொறுப்பைத் தட்டிக் கழிக்க விரும்பவில்லை.

THIRU A. R. DAMODARAN : In view of the excellent response that has been received for the Government's procurement programme, would it be possible to finish off the procurement of nine lakh tonnes before May and allow free market to exist after May ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் உறுப்பினர் அவர்கள் யூகம் தவறானது. சம்பா பயிர்களுக்கு குறியீடு 5 லட்சம் டன்தான். மொத்த அளவில் குறுவையும் சேர்ந்து ஆண்டுக்கு 9 லட்சம் டன்னே தவிர 5 லட்சம் டன் அல்ல. ஒவ்வொரு மாவட்டத்திலும் குறியீடுகள் முடிந்த பிறகு உறுப்பினர் சொல்லியது போல தானுக்காவுக்குத் தானுக்கா உள்ள தடைகள் தளர்த்தப்படுகின்றன. குறிக்கோள் முடிந்தது என்று தெரிந்தவுடனே அதைச் செய்யலாம். மாவட்டத்திற்கு மாவட்டம் உள்ள கட்டுப்பாடு கடந்த ஆண்டு போலவே கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. ஏ. சாம்பிவ ரெட்டியார் : அமைச்சர் ஒவ்வொரு முறையும் வீலையைச் சேர்த்துக் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறபோது அதைக் கட்சிப் பிரச்சாரத்திற்காக சொல்வதாகச் சொல்கிறார். அவர்கள் கட்சியைச் சேர்ந்த ஊழியர்களையே தனித் தன்மையில் அழைத்துக் கேட்டால் உண்மை தெரியும். கொள்முதலுக்கு அதிகமாக விவசாயிகள் கொடுத்திப்பதாகச் சொன்னார்கள். அதிகாரிகள் வற்புறுத்தலினால்தான் அவ்வளவு கொள்முதல் ஆயிற்று என்பதைப் பரிசீலனை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்த விலை நியாயமானதுதான் என்று சொல்கிறார்கள். அதற்கு அமோகமான ஆதரவு இருப்பதால்தான், சென்ற வருஷம் இருந்ததை விட இந்த வருஷம் அதிகக் கொள்முதல் ஆகியிருக்கிறது என்று சொல்ல முடியும். மாண்புமிகு உறுப்பினர் வி. கே. ராமசாமி முதலியார் அவர்களுக்குத் தெரியும். போன வருஷத்தில் செங்கல்பட்டு மாவட்டத்தில் 2 ஆயிரம் டன்தான் கொள்முதலாகியது. இந்த வருஷம் 22 ஆயிரம் டன் ஆகியிருக்கிறது. தென்னார்க்காட்டில் போன வருஷம் 16 ஆயிரம் டன்னாக இருந்தது இப்போது 50 ஆயிரம் டன்னுக்கு உயர்ந்திருக்கிறது. தஞ்சையில் போன ஜனவரி, பிப்ரவரியில் ஒரு லட்சத்து பதினாயிரம் டன்னாக இருந்தது. இப்போது ஒரு லட்சத்து 48 ஆயிரம் டன்னாக ஆகியிருக்கிறது. திருச்சியில் கொள்முதல் அதிகம் ஆகவில்லை என்றாலும் போன வருஷம் 6 ஆயிரம் டன் என்று இருந்த இடத்தில் இப்போது 8,650 டன்னாக ஆகியிருக்கிறது. கோயம்புத்தூரில் போன வருஷம் 2,200 டன்னாகவும் இந்த வருஷம் இந்த இரண்டு மாதங்களில் 7,250 டன் வந்திருக்கிறது. வட ஆர்க்காட்டில் போன வருஷம் 9 ஆயிரம் டன்னாகவும் இந்த வருஷம் 17 ஆயிரம் டன்னாகவும் இருக்கிறது. அப்படி எல்லா மாவட்டங்களிலும் நல்ல முறையில் விவசாயிகள் ஒத்துழைத்திருக்கிறார்கள். எங்கள் கட்சிக்காரர் சொல்கிறார்கள் என்பதற்காக அல்ல. தவறை எந்தக் கட்சிக்காரர்கள் சொன்னாலும் இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாது.

6th March 1968]

THIRUMATHI LAKSHMI KRISHNAMURTHY : Sir, I would like just to pass on some information to Government. The price for paddy paid in Kerala is 65 rupees per quintal and even that is considered inadequate, having regard to the cost of production in that State. It is not as mentioned by the Hon. Minister.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நான் ஒன்றும் அதை விமர்சனம் செய்யவில்லை. அதை முற்போக்கான கொள்கை என்று சொல்லவில்லை. கேரள நிலைமை வேறு, நமக்குள்ள நிலைமை வேறு, ஐந்து எக்கருக்கு மேலுள்ள நிலப் பிரபுக்களுக்குக் கொடுப்பது, என்ற அங்குள்ள நிலைமையைத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் விமரிசனம் செய்வது. அங்கே வசூலாவது நம்மிடம் உள்ளதைப் போல அல்ல. நமக்கு வசூலாவதில் பாதிகூட அங்கே வசூலாவதில்லை.

THIRU A. R. DAMODARAN : The Hon. Minister has mentioned that only 20 per cent is collected by procurement. Would it be possible for the Government to give the mirasdars the surplus whenever twenty per cent is procured ? Actually there is no such thing as twenty per cent.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நம்முடைய மாநிலம் கூட்டாக இருந்தபோது 20 சத விகிதம் இருந்தது. நஞ்சையில் 55 சத விகிதத்திற்கு வந்து விடுகிறது. நாம் ஒரு லெவி முறை வைத்திருக்கிறோம். ஒரு எக்கருக்குக் குறைந்தவர்கள் கொள்முதலுக்குக் கொடுக்கவேண்டியதில்லை. பதிமூன்று லட்சம் விவசாயிகள் இதனால் பயன் பெறுகிறார்கள். ஒரு எக்கரில் இருந்து 10 எக்கர் வரையில் ஸ்லேப் (Slab) முறை வைத்திருக்கிறோம். பத்து எக்கர் உள்ளவர்கள் 40 மூட்டை கொடுக்க வேண்டுமென்றும் ஐந்து முதல் ஏழு எக்கர் உள்ளவர்கள் கொடுக்க வேண்டியது என்பதற்கு ஒரு ஸ்லாப்பும் இருக்கிறது. நான் இங்கே கூறுவது பொதுவாக உள்ள ஒட்டுமொத்தமான கணக்கு. ஏற்கனவே எவ் வளவு கொள்முதல் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மேலான அளவில் கொள்முதல் செய்யப்படுவதில்லை.

Coimbatore Medical College

*190. *Q.*—**THIRU N.R. THIAGARAJAN** : Will the Hon. the Minister for Public Health be pleased to state— 2.40 p.m.

(*a*) the estimated expenditure for the construction of buildings for the Coimbatore Medical College ; and

(*b*) the place where the building will be constructed ?

கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரிக்கு எத்தனை லட்சம் ரூபாயில் கட்டிடம் கட்டத் திட்டம் உள்ளது ?

(இ) எந்த இடத்தில் கட்டிடம் கட்டப்படும் ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) கோவை மருத்துவக் கல்லூரிக்கு இதுவரை ரூ. 30.94 லட்சம் பெறுமானமுள்ள கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசினரால் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. அக்கல்லூரிக்கு மேலும் தேவைப்படும் கட்டிடங்களின் அவசியம் குறித்து அரசு ஆலோசித்து வருகின்றது.

(இ) அக்கல்லூரிக்கான கட்டிடங்கள் பீலமேட்டில் விளாங்குரிச்சி கிராம எல்லையில் அமைக்கப்பட்டு வருகின்றன.

திரு. எம். எத்திராஜுலு : தலைவரவர்களே, மாவட்டத்திற்கு மாவட்டம் மருத்துவக் கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்ற கொள்கை அரசாங்கத்திற்கு எதாவது இருக்கிறதா ? அப்படியானால் எந்தெந்த மாவட்டங்களில் இந்த ஆண்டு அல்லது அடுத்த ஆண்டு எற்படுத்தப்படும் ?

MR. CHAIRMAN : இது கோயம்புத்தூர் கல்லூரியைப் பற்றிய கேள்வி. அது பற்றி வேறு கேள்விதான் போட வேண்டும்.

திரு. கே. எஸ். அப்துல் வஹாப் : கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்க மொத்த (allotment) தொகை எவ்வளவு ? இதில் மத்திய அரசு கொடுத்த தொகை எவ்வளவு ? மாநில அரசு கொடுத்த தொகை எவ்வளவு ? நன்கொடை மூலம் வசூலித்த தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : நன்கொடை மூலம் ரூ. 25 லட்சம் வசூலித்துத் தருவதாகச் சொன்னார்கள். ஆனால் ரூ. 5 லட்சம்தான் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் முயற்சியால் கட்டிடம் கட்டுவதற்கு இடம் தருவதாக வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். மொத்தம் ரூ. 175 லட்சம் என்று திட்டம் போடப்பட்டிருக்கிறது. எல்லாவற்றையும் சேர்த்து, (advance equipment) முதலியவைகளைச் சேர்த்து ரூ. 2½ கோடியாகும்.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note*—An An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ANNOUNCEMENTS

(1) DECISION OF THE BUSINESS ADVISORY COMMITTEE.

MR. CHAIRMAN : At a meeting of the Business Advisory Committee held at 2-00 p.m. to-day, the following further programme of business has been decided :—

25th March	.. ..	Presentation of the Final Supplementary Statement of Expenditure for 1967–68.
26th March	.. ..	Discussion on the Final Supplementary Statement of Expenditure.
27th March	.. ..	Non-Official day.
28th March	.. ..	No meeting.
29th March	.. ..	Holiday
30th March	.. ..	Consideration of Appropriation Bills.
1st April	.. ..	(1) Consideration of official Bills and Government Resolution. (2) Valedictory speeches.

The Council will sit from 3 to 6 p.m. daily and adjourn on 1st April.

(2) ELECTION OF SIX MEMBERS TO THE HOUSE COMMITTEE.

Mr. CHAIRMAN : I have to inform the House that the following six candidates have been validly nominated for election to the House Committee for the financial year 1968–69 :–

1 Thiru G. Krishnamoorthy.
2 Thiru C. V. Rajagopal.
3 Thiru M. Aiyasamy.
4 Thiru A. Ponnappa Naidu.
5 Thiru M. Ethirajulu.
6 Thiru C. P. Chitrarasu.

As the number of candidates nominated is equal to the number of vacancies to be filled, namely, six, I hereby declare them to have been duly elected to the House Committee.

In addition to the above, under Rule 173(1) of the Council Rules, I nominate the following two Members to be the Members of the said Committee—

1 Thiru Mohanlal Mehta.
2 Thiru M. Sankaralingam Pillai.

The Deputy Chairman of the Council shall be ex-Officio Chairman of the Committee.

III.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1968–69—(*cont.*)

திரு. வில்சன் அபோலஸ் : தலைவரவர்களே, 1968–69-ம் ஆண்டில் உள்ள வரவு செலவுத் திட்டம் ஒரு உபரி பட்ஜெட்டாக இருந்தாலும் பல துறைகளிலும் பல வேலைகளிலும் செலவழிக்க வேண்டிய தொகைகள் அவைகளுக்குச் சரியாக ஒதுக்கப்படவில்லை. ஜில்லா ரோடுகளும், பஞ்சாயத்து ரோடுகளும், பஞ்சாயத்து யூனியனிலுள்ள ரோடுகளும் பழுதாகிக் கிடக்கின்றன. அவைகளுக்கு ஒதுக்கப்பட வேண்டிய தொகை சரியாக ஒதுக்கப்படவில்லை. இன்னும் ஆற்றங்கரையிலுள்ள ரோடுகள் பழுதடைந்து கிடக்கின்றன. அவைகளுக்கு ஒதுக்கப்பட வேண்டிய தொகைகள் ஒதுக்கப் படவில்லை. அதனால் விவசாயிகள் தங்களுக்கு வேண்டிய சாமான்களையும் அவர்களுக்கு வேண்டிய சாதனங்களையும் கொண்டுபோக முடியவில்லை. ஆகவே, அதற்கு வேண்டிய தொகை, ஒதுக்கப்பட வேண்டும். பொதுவாக ரோடுகள் அமைப்பதற்கு பணம் ஒன்றும் ஒதுக்கப்படவில்லை. கன்னியாகுமரி ஜில்லாவில் ரோடுகள் புதிதாக அமைப்பதற்கு பணம் ஒதுக்கப்படவில்லை. நாகர்கோவில் முனிசிபல் கவுன்சில், மக்கள் நிலம் விட்டுக் கொடுத்து ரோடு போட்டுத் தாருங்கள் என்று கேட்டால் நீங்கள் ரோடு போட்டுத் தாருங்கள் அதை எடுத்துக்கொள்கிறோம் என்கிறார்கள். என் என்று கேட்டால் அது தான் சட்டம் என்று சொல்கிறார்கள். இந்த அரசு அதற்கு வேண்டிய சட்டத்தை மாற்றி புதிய ரோடுகளையும் மின்சார வசதியையும், குடி தண்ணீர் திட்டத்தையும் செய்து கொடுக்க வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி ஜில்லாவில் மழை இல்லாத ஒரு தாலுக்கா விளவங்கோடு தாலுக்கா. அங்கே இருக்கும் மக்களுக்கு குடிக்கவும், குளிக்கவும் தண்ணீர் கிடையாது. சித்தார்-பட்டணம்கால் திட்டம் நிறைவேறினால்தான் அவர்களுக்கு நிவர்த்தி கிடைக்கும். அந்தத் திட்டம் விரைவில் பூர்த்தி ஆவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மூன் ஆண்டுகளை விட இந்த ஆண்டு ஒதுக்கிய தொகை குறைவு. சிறு நீர்ப்பாசனத்திற்காக கன்னியாகுமரி ஜில்லாவிற்குப் பணம் எதுவும் ஒதுக்கப்படவில்லை. குளங்கள் வண்டல்

[திரு. வில்சன் அபோலஸ்] [6th March 1968

கள் நிரம்பி தண்ணீர் இல்லாமல் இருக்கின்றன. அந்த வண்டல்களை அகற்றி, அந்தக் குளங்களில் நிறைய தண்ணீர் தேங்கும்படி வழி செய்ய வேண்டும். அந்தக் குளங்களில் மூட்டப்பாசி படிந்துவிடுவதால் சீக்கிரமாக வண்டல் நிரம்பிவிடுகிறது. அதை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் அந்தப் பாசி மறுபடியும் அந்தக் குளங்களில் படியாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தவிர, மக்கள் அந்தக் குளங்களை ஆக்கிரமித்து விவசாயம் செய்ய ஆரம்பித்துவிடுகின்றனர். ஆகையால் இந்த அரசாங்கம் அந்த மக்கள் ஆக்கிரமித்துள்ள நிலத்தைத் திரும்ப எடுத்து முன்னதாக எவ்வளவு பரப்பளவு இருந்ததோ அதே அளவில் அக்குளங்களைத் திரும்பவும் பெரிதாக்க வேண்டும். அப்போதுதான் ஆயக்கட்டு நிலங்களுக்குப் போதுமான தண்ணீர் விவசாயத்திற்குக் கிடைக்கும். திருவெட்டார், நட்டாலம், கருங்கல், மேல்புறம் போன்ற இடங்களில் உள்ள பள்ளிக்கூடங்களில் கூரை கிடையாது. அவைகளை பழுதுபார்க்க சரியான தொகை ஒதுக்கப்படவில்லை. விவசாயிகளுக்கு அரசாங்கம் பணம் கொடுத்து, அதை வட்டி இல்லாமல் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும். விவசாயிகளுக்கு கூடுதலான உற்சாகம் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் நம் உணவு பற்றாக்குறை சிறிதளவு குறையும்.

நாம் மின்சாரத் துறையை எடுப்போமானால், அங்குள்ள டிப்போக்களில் மீட்டர், ஏயர் போன்ற சாதனங்கள் இல்லை. புது கனெக்ஷன் கேட்டால் அவர்களிடத்தில் தகுந்த சாதனங்கள் இல்லை என்று சொல்கிறார்கள். இதை இந்த அரசாங்கம் கவனித்துத் தகுந்த சாதனங்களை அந்த டிபோவிற்கு கொடுக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

are good and certain other statements which are not so good. Therefore, I thought I must also give my final opinion so far as I feel in respect of this particular matter. This scheme came into operation in those areas because of the fact that Madras was a rationed area and Coimbatore was a rationed area. Now people ask : ' Why don't you introudce it in all the areas in the State '? Why should they? Do we have rationing all over the State ? We do not have rationing in the entire State. Anybody saying it should welcome rationing. But they are not prepared to welcome rationing. It is not as if this Government should for ever resort to rationing, should for ever go on with those procurement business, and should for ever be giving this one rupee a measure 'rice. Why should we not reduce it still further and why should not the Government give three or four measures per rupee ? When I was a boy we used to get 18 measures per rupee. (Laughter) I know people have bought it. That was the condition in those days. But can we ever return to those days ? The world even cannot return to those days. So we cannot return to those days. Prices have gone up all over the world. In America and elsewhere where they have sound economics, the prices have gone up. Therefore we cannot return to old days. There is no question of saying : 'Why not supply rice at one rupee a measure ' throughout the State ? No Government can undertake to do it and there can be no Minister who can expect to achieve it. I cannot blame the Hon. Minister for not introducing the scheme all over the State. The question is the areas where it has been introduced are rationed areas and previously they were purchasing rice at Re. 1·50 or 2·00 a measure. Even in the areas there we have fair price shops, people were not satisfied with the price they had to pay for the rice and the quality of the rice supplied at those shops. Therefore it is that at the time of the election they began to promise this one rupee a measure. They are entitled to do so in a democracy, when everybody asks for so many things. I will also say the same thing if I have the hope that I will be given the power. I will say ' I will do this, that and so many other things. ' But nobody will give me the power. Otherwise I will also make such statements and promises. There is nothing wrong in mentioning in the election manifesto that you will do this and that. They are expected to do it and people welcome it. I am not blaming them for it at all. None of the other parties blamed the government for it. But the tone and criticism seemed to sound something like this. ' Why not you do it all over the State. Because they promised it, they have been forced to do it .' It is not as if they wanted this for ever. Nor will they be able to do it for ever. No Minister can say he will continue it for ever and all over the place. But to satisfy the people here and Coimbatore they had to do it. They are the very vulnerable sections of our population. They will shake the Governments. There is no doubt about it. Whichever Government displeases the people in those two important centres, it will fall-down. There is no doubt about it. (Laughter). I know the temper of the people in all these areas, and there is every reason for supplying them with cheap rice. There are 20 lakhs of people. And you have Government servants also. Suppose you don't pay

this dearness allowance, this amount will be swallowed up there. If the rice were to sell at 1·50 and Rs. 2·00 they will say 'the cost of living has gone up and therefore give us more dearness allowance'.

What do th se people who suggest this the extension of the scheme throughout the State want the Government to do? Suppose they abolish this scheme and say a measure of rice will cost Rs. 2. Coimbatore and Madras are industrial centres. There you have many textile mills and here we have many industries employing thousands and thousands of labourers and they must be fed. If the industries are to be developed, the 'Thozhilalis' also must be developed. These things cannot be answered by merely having an across the table talk. You must go before the people and say these things. Suppose you stand on a platform very well lighted and say: 'No, no. From tomorrow onwards you must pay Rs. 2 a measure'. the people will slap you on your face and you have to stop talking. There is no doubt about it. I know the temper of these people. I am not mentioning these things for mere fun. It is a serious matter. Of course this scheme costs much, as much as Rs. Rs. 7·25 crores. It is not a light matter and if you go on for years like this, large amounts will have to be spent. All these things are there. We have to increase agricultural production. There are other things that we have to do. Even when there is self-sufficiency in the State, there is this difficulty in our country. Smuggling will be going on all round. Who is to prevent it and who can prevent it? If our State is self-sufficient, bags and bags of rice will go into Kerala. Who can prevent all that? We have check posts but they are checking themselves and not the rice moving through them. That is the difficulty. That is why the check posts are not working properly and effectively. If the smuggler gives Rs. 2 for each bag, the man in the post says, all right and allows it. Like that it goes on. Therefore I think it is not possible to check these movements. Even if there is self-sufficiency it will be difficult to check these movements. So rationing has been there except during the days when Rajaji abolished it. I have been living here all these years and there has been rationing from 1950. It is not possible to lift it. It is a thing which you cannot accomplish. Therefore once there is rationing in these areas you have necessarily to give rice, cheap rice to these people. One rupee a measure is a good arithmetic. Therefore the Government have adopted it.

It is all right to say that Rs. 7 crores are being sent unnecessarily for the sake of a few people. But they are not few and most of them are industrial employees and many of them are Government servants. Therefore it is that we have to feed them so that they could be kept quiet and useful. This is all that I feel about it.

Now, Sir, I will proceed quickly and say what I wish to say on some of the important matters. The next thing I wish to refer to is about agriculture. I am glad that right stress has been laid in the Budget speech on the necessity for spending large amounts on Agricultural production. It is very good and in spite of the fact that the Plan expenditure has been restricted they have adopoted what they call institutional finances. But that is a very difficu

matter. They have suggested Agriculture Refinance Corporation and then the Life Insurance Corporation, The Reserve Bank, the Land Mortgage Bank, etc. All these bodies have been suggested for the purpose of raising finance. The difficulty is that in the matter of giving loans to agriculturists, their procedure is cumbersome and there is delay in disburisng the loans. They won't give it at the proper time. They will encumber people with the help at the time when it is not wanted. Now, of course, improvements might have been made. Still the working of the co-operative societies is not satisfactory. There is a report published recently by the Government of Madras about the working of these Co-operative Societies. I looked into it. It is terrible ; the number of offences that are committed and the way in which the societies are working are not at all satisfactory. Last night an article about this appeared in the Madras Mail, and, therefore, I am mentioning it here. Therefore it is very difficult to get institutional finance. The M.I.T. has no finance to give. It has spent all its money. The difficult is about co-ordination. This is the most important thing the co-ordination of the moneys and their application to the agriculturists at the proper time. The time factor is the most important for the agriculturists. At the time when funds are needed urgently, the agriculturists must be given the money. If they do not get the money at the proper time they will lose the crop. That is why the agricult rists borrow sums from the money-lenders and bigger landlords. With all the efforts of the co-operatives, they have been able to meet only fourteen per cent of loans of the agriculturists. The rest was given by money-lenders and bigger agriculturists. It is very difficult to get institutional finance at the proper time. Therefore the Chief Minister suggested that there should be watchful care about the work of these bodies. For this purpose, a Planning and Finance Commission is necessary for this State. I made this suggestion to the previous Ministry also. The then Leader of the House, Thiru R. Venkataraman, said that this was a matter to be considered. 5–10 p.m.

Then, Sir, I suggest that there should be a Board of Agriculture just as we have the Electricity Board. I am mentioning this to the Hon. the Minister for Agriculture. He has very good ideas about agriculture. The Board should consist of representatives of Farmers, Officers, Ministers, and so on. The Minister may be the Chairman of that Board, and that Board should be entrusted with the function of distributing fertilisers and sums of money to the agriculturists. They may take finance from any place just as the Electricity Board is getting money from the State Government, by open market loans, and so on. These finances should be applied in proper time and given to the agriculturists. If the efforts in giving finances to the agriculturists are co-ordinated, the agriculturists will be very happy and will get the money in time. Just like the Electricity Board, the Agriculture Board also can function. If the suggestion given by me is adopted,

the institutional finance to the agriculturists can be given in proper time, and agriculturists will be greatly helped. Then the agriculturists can get pumpsets and so on. I am very happy that large sums of money are being allotted for supplying pumpsets.

Then I come to Education. On Education, I have not got much to say except that after the introduction of free Education in the secodary schools, there has been a deterioration in discipline. Also the aided secondary schools have got into more difficulties. I mentioned this also to the Hon. the Minister for Education at a conference. There is very great difficulty in the matter of maintenance of these institutions, putting up new buildings, and attending to repairs. Therefore it is that maintenance grants have to be given I am not for the process of increasing the special fees at all, because yesterday Mr. Kamaraj also spoke about this. Special fees are sometimes being abused. It is better to give maintenance grants regularly to those who are in need of funds for the purpose of maintaining institutions. This is the most important thing. This has to be done so far as secondary education is concerned. This free education was suddenly introduced without any phased programme If it was a phased programme, it should have been all right. Because it was suddenly introduced all our resources have gone, and we were not prepared for all the expenses that we would have to meet. Therefore the aided secondary schools are finding great difficulty to run their schools. For example, I am the Correspondent of an aided school, and I am finding it difficult to run the school without adequate maintenance grants. Because of difficulty in running the school without adequate funds, we resorted to the staging of a benefit performance a drama by 'Cho', about which questions were asked here. 'Mohamed Bin Tuglak' drama was staged, and this was seen by a thousand people. It had also brought us some good money. I did not attend the drama fully Some fun was made of political parties in the drama. It is the usual fun. Tuglak comes and says that he wants to become the Prime Minister. Then many people would not help him. They said they would come to his side, if they made them the Deputy Ministers. When he agreed, all the three hundred and fifty people defected from the party and supported him and wanted to become the Deputy Ministers. Probably this was a satire on some things that are happening, in the States. Perhaps it was a bit exagerated. Nobody will take it seriously. This is a mere fun. Many things are happening, and do we not make fun of them ? A strong indictment is made about the defectors. This is not a thing for which the promoters of the drama should be taken to task. Some one says that rice should be sold at one rupee per measure. Tuglak says it is very important. He showed his finger and said it shoud be Re. 1. It is all in fun or if the Government take it as criticism, so many criticisms are made here about one-rupee a-measure of rice, etc. I do not think there is anything wrong. At any rate I am in the Council here. They make fun of legislature members. We got some money by way of staging that drama. On that account I do not justify it. If it infringes the rules, I do not think we are justified in doing it. Anyhow I am mentioning

it, as I attended part of the drama. It does not require any questions to be asked in this matter. I am mentioning this because I was present there for some time,and I am bound to mention this, for the sake of Cho. Otherwise, he will get into trouble.

On page 36, it has been mentioned that the Government are anxious to encourage the Siddha system of medicine. I have no objection to it. I am only anxious that we should encourage all the three systems of medicine. There are of course statements about the improvement and encouragement of the other systems. They are interested in the other systems of medicine also. I want to make it clear that all the three systems are based upon the same principle, but only the names differ. Many of our Rajahs had Unani doctors. There was a Unani doctor called Zin Allauddin, the uncle of Sir Mohamed Usman in Tanjore. Our people do not make any difference between the systems of Indian medicine. Whether the language is Arabic, or Sanskrit, or Tamil, it does not matter. But we must understand the prescriptions correctly. For instance, it is said : 'கல்லைப் பிளந்து தலையில் போட்டால் தலைவலி தீரும்' That is a very good idea. We should correctly understand the terms expressed here. That is why the Siddha system has to be correctly interpreted and mentioned to people because most of these Tamil songs by Siddhas do not explicitly tell these things. It was considered a secret in those days, and, therefore, they covered it up by various words. Those people who know it only can understand. Similar is the case with Ayurvedha system. I would appeal to the Government not to make any difference between the three systems. I am not saying they are making. I am only asking them not to make any difference between them but to encourage all of them so that they may all combine and relieve us of all diseases. For example, take Sarpagandi. Pills are now made out of it. Ayurveda people are getting lakhs of rupees because of this. They can always add to the pharmacopea.

With regard to raffles, I have got to say one or two things. The object is to help, meet the capital expenditure of our State. With regard to horse racing, there was an Act passed here, but it has not come into effect. Somebody mentioned that Rs. 22,000 was got in this and asked why it should not be adopted. We should not foster the gambling instinct. People are prosecuted for the "*Moonu seettu*". Immediately the policemen come and arrest these people. In the school, with which I am connected, three of these people were caught by the Police. Therefore, the Government have got the idea of suppressing this gambling instinct. Secondly, prize bonds were issued by the Government of India. There were three or four occasions when I saw the casting of lots in Madras. The prize bonds were abused. Therefore, the Government of India stopped it. I heard this from a Member of the Reserve Bank itself. Therefore, there is nothing wrong in my saying it. There is a lot of room for abuse in these things. There is a lot of abuse. Therefore, I request the Government to think twice or thrice over the matter.

[Thiru K. Balasubramanya Ayyar] [6th March 1968

இதுபற்றி அரசாங்கம் தான் பரிசீலனை செய்யவேண்டும் என்று சொல்லிக்கொண்டு, கடைசியில் தமிழிலேயே பேசி, என் பேச்சை முடிக்க விரும்புகிறேன்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் அநேக நல்ல காரியங்கள் இருக்கின்றன. இதிலே சில குற்றங்கள், குறைகள் இருந்தால், அவைகளைச் சீர்திருத்தி, அழகாக ஆக்கி, நம்முடைய மாகாணத்துக்கு இருக்கும் நல்ல பெயரை நீலநாட்ட வேண்டும். இந்த பட்ஜெட் வரவு செலவுத் திட்டம் நிறைவேறுவதில் எல்லோருக்கும் பொறுப்பு இருக்க வேண்டும். பொறுப்பு பற்றிப் பேசும்போது, கட்சிப் பொறுப்பல்ல. முக்கியமான பொறுப்புகள், எந்தக் கட்சியாய் இருந்தாலும், யாராய் இருந்தாலும், இதனுல் ஜனங்களுக்கு ஒரு நன்மை உண்டாகிறது என்று சொல்வோமேயானால், நம்முடைய மனதுக்கு எது சரியானவையோ அவைகளை செயல் படுத்துவது நம்முடைய கடமை. அதனுலே, திருவள்ளுவர் சொன்னது போல், ஒரு பகை இல்லாமல், பகையை நீக்கி விட்டு எல்லா கட்சிக்காரர்களும் சேர்ந்து நலனுக்கு வேலை செய்து, நம்முடைய தமிழ்நாடு உயர்ந்து வரவேண்டும் என்று சொல்லி, அதைப் பார்க்க நான் கூட உயிரோடிருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். இதைச்சொல்லி என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. கே. ராமகிருஷ்ண ஆசாரி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நிதி நிலை அறிக்கை விஷயமாக எனது சில கருத்துக்களைச் சொல்ல இங்கே நான் முற்படுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கு சமர்ப்பித்த அறிக்கையிலும், நமது மாண்புமிகு கவர்னர் பெருமான் இங்கு நிகழ்த்திய உரையிலும், விவசாயத்துக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனல இந்தச் சந்தர்ப்பத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் நடந்த சில விஷயங்களை இங்கே குறிப்பிட நான் விரும்புகிறேன். நமது மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்கள் பல மாவட்டங்களிலும் விவசாய கருத்தரங்குகள் நடத்தி, சென்ற டிசம்பர் 27-ம் தேதி அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் கருத்தரங்கு ரொம்பச் சிறப்பாக நடத்தப்பட்டது. ஆனல் கருத்தரங்கில், விவசாயப் பெருமக்களுடைய கருத்துக்களையும், மக்கள் பிரதிநிதிகளுடைய கருத்துக்களையும் இவர்கள் நன்றாகக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். விவசாயம் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் நன்றாகவே, நல்ல முறையிலேயே செய்து வருகிறார்கள். அவர்களுக்கு நேரில் கொடுக்கவேண்டிய சில கருத்துக்களையும், இப்போதிருக்கிற நிலையில் நாம் அந்த விவசாயப் பாதுகாப்புக்கு என்ன அவசியமோ அவைகளைப் பற்றியும் அங்கே நாம் வலியுறுத்திஞேம். அங்கே நீர் மட்டம் குறைந்துவிட்டது. ஆகவே நீர் மட்டத்துக்குக் கீழே 40' தண்ணீரை பம்ப் செய்து அந்தப் பயிரைக் காப்பாற்ற என்ன வேலை எங்கே செய்வது என்று கேட்டிருந்தார்கள். அதைக் கருத்தில் கொண்டு, நான் சென்னை சென்றதும், மராமத்து அமைச்சர் மாண்புமிகு கருணுநிதி அவர்களிடம் இதற்கான உதவியைப் பெற்று உடனடியாக பம்ப் செட்டுகளை அனுப்புவதாக அவர்களே சொல்லிப் போனர்கள். நமது மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்களும் அங்கே கூட்டத்திலும், பொதுக்கூட்டத்திலும், இதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்படும் என்று உறுதி அளித்துப் போனர்கள். ஆனல் என்ன நடந்தது ? இவர் உறுதி செய்தது ஒன்றுமே நடக்காமல், சுமார் 40,000 எக்கர் விவசாயம் செய்த நல்ல நிலங்கள் கருகி பாழாகிப் போய்விட்டன. இதை நான் மிக வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். கருத்தரங்கு என்றால், மக்களுடைய கருத்துக்களை அறிந்து, எடுக்கவேண்டிய நடவடிக்கையை எடுத்து, உடனடியாகப் பரிகாரம் செய்தால்தான் அந்தக் கருத்தரங்கு பிரயோஜனமாய் இருக்கும் என்ற எனது கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனல் இந்த நிலையில் அங்கு இந்தத் தண்ணீர் தட்டினல் பாழாகிவிட்ட சுமார் 40,000 எக்கராவுக்கு வரி வஜா செய்யவேண்டும் என்று இந்த அவையில் நான் கேட்டுக் கொள்கிறேன். அங்கிருக்கிற நிலையில் நில வரி, நீர் வரி, இன்னும் அங்கு இப்போது ஸெட்டில்மெண்ட் நடந்துகொண்டிருப்பதால் அந்த ஸர்வே வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே உள்ள வரிகளையே கொடுக்க இயலாதவர்கள

6th March 1968] [திரு. கே. ராமகிருஷ்ண பூசாரி]

இந்த ஸெட்டில்மெண்ட் வரி வேறு இருப்பதால், விவசாயிகள் ரொம்பக் கவலைப்படுகிறார்கள். அதனால் தயவு செய்து நமது மாநில அரசாங்கம் அவர்களுக்கு இந்த உதவி செய்து, இந்த வரி வஜா செய்ய வேண்டு மென்று எனது கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக விவசாயிகளுக்கு பாங்குகள் கடன் கொடுத்திருக்கிறது, அதையும் இப்போது விவசாயிகள் இந்தச் சந்தர்ப்பத்தில் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். அதை ஓராண்டுக் காலத்துக்கு மாற்றி வைத்து, விதை, உரம் போன்றவைகளைக் கடனுக்குக் கொடுத்து, அந்த விவசாயிகள் மேலும் ஊக்குவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நமது பட்ஜெட்டில் வரவு-செலவுக் கணக்கில் மானியம் பல மாவட்டங்களில் ஜிணறு தோண்டுவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் அதற்கான மானியம் ஒதுக்கப்படவில்லை. இந்த மாதிரி மழை இல்லாத காலத்தில், விவசாயிகளுக்கு உதவுவதற்காக, இந்தக் ஜிணறு தோண்டுவதற்கு அவசியமான மானியத்தை ஒதுக்கி, பம்ப் செட் முதலானவைகளை வழங்குவதில், அவர்களுக்கு உதவி செய்ததாக இருக்கும் என்ற எனது வேண்டுகோளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தபடியாக இந்த மாதிரி நீர் குறைந்த நேரங்களில் அதை சமாளிப்பதற்காக இரண்டொரு திட்டங்கள் இருக்கின்றன. நெய்யாறு திட்டம் போன்ற திட்டங்கள், இந்த 2 திட்டங்களை சீக்கிரமாக செய்து முடித்தால், அந்த விவசாயிகளுக்கும், உணவு தட்டுப்பாட்டுக்கும் பரிகாரமாய் இருக்கும் என்று இந்தச் சபையில் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சென்ற நவம்பர், டிசம்பர் மாதங்களில் தஞ்சாவூரிலிருந்து கொள்முதல் செய்துவந்த நெல்லை மக்கள் வாங்குவதற்கு ரொம்பவும் கஷ்டப்பட்டு, இந்த நெல்லை இம்மாதிரியாகச் செய்கிறார்களே என்று வருத்தப்பட்டார்கள். அடுத்த காரணம் என்னவென்றால், தஞ்சாவூரில் அந்த நெல் எல்லாம் ஈரம், பதர் எல்லாம் நீக்காமல் சுமார் 30 சத விதம் போல் குறைந்து விட்டது. இறுதியாக ஈரம் போக்கி, பதர் எல்லாம் நீக்கியிருந்தால், இந்தக் குறைவு ஏற்பட்டிருக்காது. ஆகவே இந்த மாதிரி செய்யாமல், கன்னியாகுமரி மாவட்டத்துக்கு ஈரப் பதனும் இல்லாமல் நெல் அனுப்ப வேண்டும் என்று நான் கூறிக்கொள்கிறேன். அத்தகபடியாக, இந்தக் கன்னியாகுமரி மாவட்டத்தில் இவ்வித நிலைமை ஏற்பட்டுள்ளதால், அதைப் பஞ்சப் பிரதேசமாகக் கருதி, அங்கே பஞ்ச நிவாரண வேலைகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஒரு படி அரிசித் திட்டத்தை விஸ்தரித்தால், அந்த மக்களுக்கு உதவியாய் இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்கிறேன். 5-30 p.m.

அடுத்தபடியாக பின் தங்கிய சமூகத்தினரான விஸ்வ கரும சமுதாயத்தினுடைய நிலைமை ரொம்ப மோசமாக இருக்கிறது. இந்தியா சுவர்ன் மெண்ட் செய்த தங்கக் கட்டுப்பாடு சட்டம் கொண்டு வந்ததிலிருந்து பொற்கொல்லர்களுடைய நிலைமை ரொம்பவும் மோசமான நிலைமையிலிருக்கிறது, என்று நான் இந்த அவையில் பல முறை பேசி, சென்ற கூட்டத்தில் நான் அதைத் தீர்மானம் மூலமாகவும் கொண்டு வந்தபோது, இங்கே அந்த விவரத்தை விளக்குவதற்கு நமது மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் ஒரு நீண்ட பதிலே கொடுத்தார்கள். மத்திய சர்க்காருக்கு இது விஷயமாக எழுதி, இந்தக் கடனை வஜா செய்வதன் மூலம், பொற்கொல்லர்களுக்கு இருக்கிற நிர்பந்தங்களை அகற்றுவதற்கும் வேண்டிய வசதிகளைச் செய்யவேண்டும் என்று பதில் கூறினார்கள். ஆனால் இதுவரையில் சுமார் 10 மாதங்களாகியும், இதுவரையில் எந்த விதமான நன்மையும் ஏற்படவில்லை. அதோடு இதைச் சேர்ந்த மற்ற இதர தொழிலாளர்களுக்கும் எந்த விதமான பாதுகாப்போ, தொழில் அபிவிருத்திக்கான எந்தவிதமான திட்டங்களோ இந்த பட்ஜெட்டில் காணப்படவில்லை. பல இடங்களிலும் கொல்லு, தச்சு போன்ற கோ-ஆப்பரேடிவ் சங்கங்கள், ஸ்தாபனங்கள் அமைத்து அதற்கான சில நடவடிக்கை நடந்து, சில தொழிலாளர்களுக்கு நன்மை நடந்துகொண்டிருந்தது. அந்த முறை எல்லாம் இப்போது அனைத்து, ஆங்காங்கே தொழிலாளர்களுக்கு மத்தி

[திரு. கே. ராமகிருஷ்ண ஆசாரி] [6th March 1968

மாக இருக்கிறது. நாகர்கோவிலில் இந்த சிற்பத் தொழிலில் மாணவ ருக்கு பயிற்சி ஸ்தானம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. தேர் பயிற்சி ஸ்தா பனம் ஒன்று 2, 3 ஆண்டுகளுக்கு முன்னதாக அங்கே ஆரம்பிக்கப்பட்டது. அங்கு செய்த தேர் தான் இங்கே கண்காட்சியிலும் இருந்தது. அமெரி காவிலும் நடந்தது. பயிற்சிக்கு எடுத்த பையன்கள், அவர்களுடைய பயிற்சி முடிவதற்கு முன்னதாகவே இன்னும் கூடுதலாக பயிற்சிக்கு பையன்கள் எடுக்கப்படும் என்ற திட்டத்தோடு தான் அங்கே ஆரம்பிக்கப் பட்டது. ஆனல் அங்கே அந்த மாணவர்களோடு நின்றுவிட்டே தவிர, இதற்கு அடுத்தபடியாக இதை இன்னும் தொடர்ந்து நடத்த வேண்டும் என்ற எண்ணத்தில் எந்தவிதமான உத்தரவாதமும் அதற்கு இல்லே. ஆகவே அதையும் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஆச்சாரியார் சமுதாயம் எந்த நிலையில் இருக்கிறது? இந்த சமுதாயத் திற்கு போலீஸ் பாதுகாப்பு கூட இல்லே என்று நான் இங்கு வருத்தத் துடன் கூறிக்கொள்கிறேன். இதற்கு உதாரணமாக நான் ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். சென்ற டிசம்பர் மாதம் 5ஆம் தேதி அன்று தூத்துக்குடியிலே ஒரு சம்பவம் நடந்தது. தூத்துக்குடியை அடுத்த மாப்பிள்ளேவுரணி என்ற ஊரிலே விசுவகரும சமுதாயத்திலே இரண்டு பிரிவு இருக்கிறது. அந்த ஊரிலே சுபலேயாண்டி ஆச்சாரி என்பவர் இருக்கிறார். அவர் ஒரு கொலேக் கேசிலே சாட்சி சொல்லவில்லே என்பதற் காக, அவரைப் போலீசார் அப்படியே கொண்டுபோய் போலீஸ் ஸ்டேஷ னிலே வைத்து அடித்துக் கொன்று இருக்கிறார்கள். கூட இருந்த துரை பாண்டியன் என்ற நாடார் சமுதாயத்தைச் சேர்ந்தவர் மாத்திரம், தப்பிப் பிழைத்தோம் என்ற நிலையிலே ஓடி வந்திருக்கிறார். இந்த நிலையிலே நம்முடைய பாதுகாப்புத் துறை நடந்து கொண்டு போனல் என்ன ஆவது? மேலும், இந்த மைனரிட்டி ஜனங்களுக்கு பாதுகாப்பு இல்லே. பொது வாக, பாதுகாப்பு நிலேயை நல்ல முறையிலே கவனித்து நிர்வகிக்க வேண்டுமென்று இந்த போலீஸ் துறையினரை இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த பொற்கொல்லர் சமுதாயத்திற்கு இந்த மாதம் 31—3—1968 உடன் கொடுக்கப்பட்ட எல்லா சலுகைகளும்—கல்வி சலுகை, இன்னும் இதர சலுகைகள், "**Employment exchange**" லே பதிய செய்து வேலே தருவது—போன்றவைகள் எல்லாம் நிறுத்தப்படுவ தாக ஒரு உத்தரவு இந்த அரசாங்கத்திடமிருந்து வந்திருக்கிறது. ஆகவே இந்த அரசாங்கம் அப்படிப்பட்ட சலுகைகளேத் தொடர்ந்து அந்த பொற் கொல்லர் சமுதாயத்திற்குத் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே வலி யுறுத்துகிறேன்.

அதோடு, இவர்களின் நிலே—இந்த பொற்கொல்ல தொழிலாளர்களின் நிலே சீர்பட வேண்டுமானல், இவர்களேப் பின் தங்கிய பட்டியலில் சேர்த்துவிட்டால், இவர்கள் ஒரு வகையில் பல சலுகைகளேப் பெற்று நல்ல முறையிலே வாழ்வதற்கு முடியும் என்று சொல்லிக் கொள்கிறேன். கைத் தொழில் வளர்ந்தால்தான் நாட்டின் நிதி நிலேமை நன்முக வரும். இந்த அடிப்படையிலே இந்தத் தொழிலாளர்களின் நிலேமையை நல்ல முறையில் கொண்டு வருவதற்காகவே நான் இதை இங்கே வலியுறுத்துகிறேன்.

அடுத்து, கூட்டுறவு. நம் மாநிலத்தில் பல கூட்டுறவு நூற்பு ஆலேகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எந்த நூற்பு ஆலேயில் ஆவது நல்ல முறையிலே தொழிலாளர்களுக்குக் கூலி கொடுக்கப்படுகிறதா, அல்லது அந்த நூற்பு ஆலேகள் நஷ்டம் இல்லாமல் இயங்க செய்கின்றனவா, என்று பார்த்தால், அப்படி இல்லே.

இதை இந்த அரசாங்கம் பரிசீலனே செய்து இதிலே நஷ்டம் இல்லாமல் இருக்கவும், தொழிலாளர்களுக்கு நல்ல முறையிலே கொடுக்கப்படவும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுது

6th March 1968] [திரு. கே. ராமகிருஷ்ண ஆசாரி]

அவர்களுக்கு கொடுக்கும் பணத்தை ஒரு ரூபாயிலிருந்து, இரண்டு ரூபாய் ஆக்கி, பிறகு மூன்று ரூபாய் ஆக்கித் தரப்படுகிறது. ஆனாலும், கடந்த மூன்று வருஷமாக பார்க்கும்பொழுது, இந்த கூலி பரவலாக உயர்த்தப் படாமல் இருக்கிறது. எனவே, இதனுடைய நிர்வாகத்தில் சில மாறுதல் கள் செய்து, இதை உடனடியாக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த பட்டதாரிகளும், மற்ற தொழிலாளர்களும், மேலும் டாக்டர் போன்றவர்களும் படித்துவிட்டு இங்கே தொழில் இல்லாத நிலைமையிலே வாழ்ந்து கொண்டு வருகிறார்கள். இந்த அரசு இன்னும் உத்தியோகத் திலே இருப்பவர்களைக் கூட வேலையில் இருந்து நீக்குவதற்காக இருக்கிறது என்று நான் இன்றைக்கு பத்திரிகையிலே கூட பார்த்தேன். இந்த நிலைமை ஏற்படாமல் இந்த தொழிலாளர்களுக்கும், பட்டதாரிகளுக்கும், வேலை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 5-40 p.m.

அடுத்து, குடி தண்ணீர் திட்டம். பல ஆண்டுகளாக இந்தக் குடி தண்ணீர் திட்டத்தை வெற்றிகரமாக நடத்த வேண்டுமென்று கூறியும், பல இடங்களிலே குடி தண்ணீருக்கு வேண்டிய பம்புகள், குழாய்கள் போன்றவைகளை போட்டிருக்கிறார்களே தவிர, இந்த திட்டம் இன்னும் வெற்றிகரமாக நிறைவேற்றப்படவில்லை. இந்தத் திட்டம் கன்னியாகுமரி ஜில்லாவில் தக்கலை போன்ற பல இடங்களிலே நிறைவேற்றப்படாமல், அங்கு எல்லாம் குடி தண்ணீர் சப்ளை செய்யப்படாமல் இருக்கிறது. இரண்டாவதாக, ஹரிஜன கமிட்டியிலே இருந்தெல்லாம் இப்பொழுது மான்யங்கள் தரப்படுவதில்லை—குறிப்பாக வீடு கட்ட மான்யங்கள் தரப் படுவதில்லை என்று அந்த ஜில்லாவிலே இருக்கின்ற மக்கள் எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு "ஹரிஜன காலனி" கட்டிக்கொடுக்கவும், மற்றும் சில சௌகரியங்களைச் செய்து தர வேண்டுமென்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும், எங்கே பார்த்தாலும், இந்த பஞ்சாயத்துக்கள் எல்லாம் மந்தமாக போய் கொண்டிருக்கின்றன. கேட்டால் "எங்களுக்கு இன் னும் ஆலோசனையும், உத்தரவும் மேலே இருந்து வரவில்லை" என்று சொல்லுகிறார்கள். சரியாக எந்தவிதமான வேலையும் செய்யாமல் அவர் கள் சுமார் 10 மாதமாக இருக்கிறார்கள். நாங்கள் இது பற்றி "Development Council" லே கேட்டால், அது வேறு ஒரு கொள்கையை எங்களிடம் சொல்லுகிறது. எனவே, மக்களால் பஞ்சாயத்துக்குக் கொடுக்க வேண்டிய வரிப் பணம் குறைந்துவிட்டால் அது மக்களின் சௌகரியத்திற்கு நல்லதல்ல என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, வன வளம். கன்னியாகுமரி ஜில்லாவில் வன வளம் எல்லாம் நல்ல முறையிலே அமைந்திருக்கிறது. இப்பொழுது அங்கேயுள்ள காடுகள் எல்லாம் வெட்டி அழிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய அரசாங்கம் அந்த காடுகளிலேயுள்ள மரங்களை வெட்டி விறகுக்கு கொடுக்கக் கூடாது. மேலும், அடிக்கடி அங்குள்ள மரங்களை எல்லாம் வெட்டப்பட்டு, காடுகள் அழிக்கப்படுவதனால், மழை குறைகிறது என்ற எண்ணம் பொது மக்க ளிடத்திலே இருக்கிறது. எனவே, அப்படிப்பட்டவைகளை நம்முடைய வன இலாக்கா அமைச்சர் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த சபையிலே எனக்கு பேச வாய்ப்பு கொடுத்ததற்காக நன்றி தெரி வித்து நான் இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. எம். அய்யாசாமி :** துணைத் தலைவரவர்களே, 1968–69ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொள்ளுகிற வாய்ப்பு கிடைத் தது குறித்து முதலிலேயே எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வரவு செலவு திட்டத்தைப்பற்றி பல பேர் பாராட்டிப் பேசியிருக் கிறார்கள். எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களிலே பலர் அதிலே உள்ள குறைகளை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். ஆனால், ஆளுகின்றவர்

[திரு. எம். அய்யாசாமி] [6th March 1968

கீன பாராட்டிப் பேசுவது என்பது இன்றைக்கு ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு—அந்தக் கட்சியைத் தழுவி கூட்டணிகளாக சேர்ந்திருக்கின்ற கட்சிக்காரர்களுக்கு அவசியமான ஒன்றுதான். ஆனால், அதிலேயுள்ள குறைகள் என்ன என்பதை சுட்டிக் காட்டுவதுதான் எதிர்க் கட்சிக்காரர்கள் ஆகிய எங்களுடைய பொறுப்பாகும். குறைகளைச் சொல்லுவது என்று சொல்லும்பொழுது, அதற்குப் பொருள் நாட்டினுடைய நலனை கருத்தில் கொண்டும், அந்த குறைகள் நிவர்த்திக்கப்பட்டால் அதனால் இந்த நாட்டுக்கு எதிர் காலத்திலே வரக்கூடிய பலனைக் கருதியும்தான் அந்த குறைகள் எடுத்துச் சொல்லப்படுகிறதே தவிர, குறைகளை எடுத்துச் சொல்லுவதாலேயே எங்களை நீங்கள் பாராட்டவில்லையே என்று சொல்லுவதற்கு அவசியமில்லை. உங்களை பாராட்டுவதற்காக எல்லாக் கட்சிக்காரர்களும் இருக்கிறார்கள்—இன்னும் சொல்லப்போனால் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட சில சமயங்களிலே உங்களை பாராட்டத்தான் செய்கிறார்கள். அத்தனை பேரும் பாராட்டிவிட்டால், அந்த வரவு செலவு திட்டத்திலேயுள்ள குற்றம், குறைகளை சுட்டிக் காட்டுவதற்கு இடமில்லாமல் போய்விடும். ஆகவே இன்றைய வரவு செலவுத் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் சமர்ப்பித்து உரையாற்றியபோது, அவர்கள் குறிப்பிட்டுக் காட்டிய சில புள்ளி விவரங்கள் நமக்கு சில சிந்தனைகளைத் தூண்டுகின்றன. 1966-67ம் ஆண்டில் இந்த சர்க்காருக்கு வந்திருக்கக் கூடிய வருமானம் ரூ. 2,01,42,70,618. இப்போது இந்த இரண்டு ஆண்டுகள் கழித்து, இந்த வரவு செலவு திட்டத்தில் எதிர்பார்க்கக் கூடிய வருமானம், செலவிற்காகக் குறிக்கப்பட்டிருக்கும் தொகை ரூ. 2,48,27,41,700. ஆகவே 201 கோடியிலிருந்து 248 கோடி வரை செலவிடப்படும் அளவிற்கு தொகை கூடியிருக்கிறது என்று சொன்னால் இந்த சர்க்கார் வரியே போடவில்லை, வருமானம் உயர்ந்து இருக்கிறது என்று சொல்வதில் பொருள் இருக்கிறதா என்று நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த வரவு செலவுத் திட்டத்தில் வரி போட்டிருக்கிறோமா என்று உறுப்பினர்கள் பலர் கேட்டார்கள். இந்தத் திட்டத்தில் போடவில்லை என்றாலும் சில நாட்களுக்கு முன்னால், சில மாதங்களுக்கு முன்னால் போடப்பட்ட வருமானம் இதில் சேருகிறது என்பதை மறந்து விடக்கூடாது. பஸ்களுக்கு கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. சர்க்கார் பஸ்களுக்கு உயர்த்தப் போவதாக பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். மக்களின் நலனைக் கருதித்தான் உயர்த்துகிறோம்; நாங்கள் அரை பைசா உயர்த்துவதின் மூலம் மற்ற தனியார் பஸ்களுக்கு கட்டணம் குறைக்கப்படவிருக்கிறது. தனியார் கம்பெனி பஸ்கள் அதிகமாக ஒடிக் கொண்டிருப்பதால் அதிலே தான் மக்களுக்கு லாபம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தனியார் கம்பெனிக்காரன் அரை பைசா குறைப்பதில் பொது மக்களுக்கு லாபம் இருக்கிறது என்பதற்காக சர்க்கார் பஸ்களில் அரை பைசா கட்டணம் உயர்த்த வேண்டியது அவசியம்தானு என்பதை இந்த அமைச்சரவை சிந்திக்க வேண்டும். இதைப்போலவே விறகின் வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. இது ஏற்கனவே செய்துவிட்டபடியால் இப்போது வருமானம் அதிகமாகியிருக்கிறது. அதோடு மத்திய சர்க்கார் உதவி செய்யவில்லை என்ற வார்த்தையை அடிக்கடி உபயோகித்து இருக்கிறார்கள். உதவி செய்யவில்லை என்பதைச் சொல்லிவிட்டு கொடுத்திருக்கும் புள்ளி விவரம் மத்திய சர்க்கார் எந்த அளவிற்கு உதவி செய்திருக்கிறது என்பதைக் காட்டுகிறது. ஏற்கனவே மத்திய சர்க்கார் கொடுத்து வந்த தொகை வறுதாழ ரூ. 40 கோடி. இந்த ஆண்டு ரூ. 47 கோடிக்கு மேலாகவே மத்திய சர்க்காரிலிருந்து உதவிகள், மானியங்கள் கிடைக்கக்கூடிய வகையில் இருக்கிறது. அது மாத்திரமல்லாமல் மத்திய சர்க்கார் நான்காம் ஐந்தாண்டு திட்டத்திற்கு நமக்கு 8 கோடியே 90 லட்சம் ரூபாய் ஒதுக்கி 1966-67-லிருந்து தொடங்கும் ஒவ்வொரு ஆண்டிற்கு, 6 கோடியே 5 லட்சம் ரூபாய் அதிகமாக சிறப்பு மானியமாக அளிக்க ஒப்புக் கொண்டிருக்கிறது என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அந்த வகையிலும் ஒன்றும் குறைத்துக் கொடுக்கவில்லை. மற்ற மாநிலங்களைப் போலவே பாரபட்சமில்லாமல் நடக்கிறார்கள் என்பதை கண்ணியமாக ஒத்துக் கொண்டிருக்க வேண்டும். மத்திய சர்க்கார் மீது குறை சொல்லிக் கொண்டே, புள்ளி விவரத்தில் அதிகமாக காட்டியிருப்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

6th March 1968] [திரு. எம். அய்யாசாமி]

அதுமாத்திரமல்லாமல் விற்பனை வரியை உயர்த்தியிருக்கிறார்கள். 48 கோடியே 26 லட்சம் ரூபாய் 1966–67ல் இருந்திருக்கிறது. இன்றைக்கு இது 65 கோடியே 54 லட்சமாக வருகிறது. இவ்வளவு அதிகமாக உயர்ந்திருக்கிறது என்று சொன்னால், எதிர்க்கட்சிகள் இவை வரியில்லையா என்று கேட்காமல் இருக்க முடியுமா ? ஆகவே வரி போடுவது தவறு என்று நாங்கள், எதிர்க்கட்சிகள் சொல்லப் போவதில்லை. எனென்றால் நாங்கள் பல தடவை போட்டிருக்கிறோம். வரிகள் நாட்டின் நலன் கருதி போடப் படுவதாகும். அப்போதுதான் நல்ல பல காரியங்களைச் செய்ய முடியும். வரி போட்டு காரியங்களைச் செய்கிறோம் என்று சொன்னால் ஒத்துக் கொள்ளலாம். நாங்கள் வரியே போடவில்லை, செலவு அதிகமாக செய்கிறோம் என்பதைப் போல இந்த திட்டத்தில் காட்டியிருப்பது உண்மையில் பொதுமக்களை ஒன்றும் தெரியாதவர்களாக ஆக்க முயற்சி செய்வதாக இருக்கிறது. இதைப் போல வருமானம் அதிகமாக வந்திருக்கிறது. இவ்வளவிற்கு 70 லட்சம் ரூபாய் வரை உயர்யாக காட்டி இந்த பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது என்றால் இதிலிருந்து புதிய திட்டங்கள், நிறை வேற்றப்பட இருக்கும் திட்டங்கள் என்னென்ன இந்த மன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த மன்றம் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். எனென்றால் வருமானம் அதிகமாக வருவதற்குத் தகுந்தபடி செலவுகள் இந்த அமைச்சரவை என்ன புதிய திட்டங்கள் நிறைவேற்றியிருக்கிறது என்பதை, குறிப்பாக உள்ள பெரிய திட்டங்களில் கூட காட்டியிருப்பதாகத் தெரியவில்லை. வேளாண்மைக்கு அதிகமாக ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்வதின் மூலமாக பெரிய காரியத்தைச் செய்துவிட்டதாக அமைச்சரவை கூறிக்கொண்ட போதிலும், எந்த அளவிற்கு செய்திருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். கல்வித் துறையில் அதிகமாக பணம் செலவழிக்க இருக்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் புதிய மாறுதல், புதிய திட்டம் எந்த ரூபத்தில் இருக்கிறது என்பதை விளக்கவில்லை. புதிய ஹாஸ்டலைக் கட்ட யிருக்கிறோம், பள்ளிகளை தொடங்கயிருக்கிறோம், கல்லூரிகளைத் திறக்க இருக்கிறோம் என்பதைப் போன்ற அந்தப் புள்ளி விவரங்கள் குறிப்பிடத் தக்க அளவுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. நல்ல விதமாகக் கல்வி வளர்ச்சிக்குப் போதுமான அளவிற்கு பின்தங்கிய நிலையில் உள்ள சமுதாயங்களுக்கு ஊக்கமளிக்கும் திட்டங்களைக் குறிப்பாக ஒன்றும் போட வில்லை. எங்கள் தலைவர் காமராஜர் அவர்கள் சொன்னார்கள். சாதாரண மாக ஒரு குழந்தை பிறப்பதிலிருந்து வளர்ந்து பெரியவன் ஆகும் வரையில் உள்ள பொறுப்பை, படிக்கும் செலவை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். அதுதான் எங்கள் விருப்பம். உண்மையிலேயே காங்கிரஸ் அரசாங்கம் எற்பட்டிருக்குமானால் அதற்கு ஆரம்ப திட்டமாவது இதற்குள் வகுக்கப்பட்டிருக்கும்.

5-50 p. m.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, காமராஜர் அவர்கள் இவ்வாறு கூறிய சமயத்தில் அகில இந்தியாவிற்கும் தலைவராக இருந்தார். காங்கிரஸ் வெற்றி பெறுமானால் கனம் உறுப்பினர் சொன்னது மாத்திரமல்ல, ஆளுக்கு ஒரு வீடு தரப்படும் என்றும்கூட சொன்னார்கள். அதைப் போலவே குழந்தைகள் படித்து பெரியவன் ஆகும்வரையில் உள்ள பொறுப்புகளை அரசு ஏற்றுக் கொள்ளும் என்றும் சொன்னார்கள். அவர் சொன்னது இந்த அகில இந்தியாவிற்கும் பொருந்தும். இப்போது இந்த அகில இந்தியாவில் பல மாநிலங்களில் காங்கிரஸ் வெற்றிபெற்று அங்கே காங்கிரஸ் அமைச்சரவைகள் இருகின்றன. ஆகவே அங்கே தலைவரின் உறுதி மொழிப்படி இந்த திட்டங்கள் எல்லாம் அமுல் நடத்தப் படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. கே. ராஜாராம் : அவர் சொன்னது லட்சியமே ஒழிய, உடனடியாக நிறைவேற்றக் கூடிய காரியமல்ல. அது ஒரு நாட்டின் லட்சியம் என்று தான் பேசினார். உடனே நிறைவேற்றக்கூடிய காரியம் என்று அவர் சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதைப்போலவே நாங்கள் சொல்வதையும் லட்சியங்களாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

[6th March 1968

திரு. எம். அய்யாசாமி : மிக்க நன்றி. இலட்சிய அளவிலாவது கொள்கைகளை எடுத்துக் காட்டியிருந்தால் உண்மையில் நாங்கள் வரவேற்று ஆதரிப்போம். அதோடு மாத்திரமல்ல. அகில இந்தியாவிலும் முன்பு காங்கிரஸ் ஆட்சிதான் இருந்தது. ஆனால் தமிழகத்தில் கல்விக்கு செய்யப்பட்ட மாதிரி மற்ற மாநிலங்களில் செய்யப்படவில்லை. எட்டாவது வகுப்பு வரை இலவச படிப்பு என்று ஆரம்பித்து, அதை எஸ்.எஸ்.எல்.சி. வரை பின்னர் ஆக்கி வைத்து, பின்தங்கிய வகுப்பினர்களுக்கு போதுமான கல்வி சலுகைகள் கொடுத்து, உபகாரச் சம்பளம் கொடுத்து எல்லோருக்கும் படிக்கும் நிலைமையை உண்டாக்கியிருக்கிறார்கள். எங்கள் தலைவரின் லட்சியம் இந்த தமிழ்நாடு மாத்திரம்தான். எல்லா மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சியிருந்தாலும், நிறைவேற்றியது தமிழகத்தில்தான். காமராஜர் சொன்னது தமிழகத்தில்தான். நம்மிடம்தான் சொன்னார். நாம் தான் அந்தத் துறையில் முன்னேறிக் கொண்டிருக்கிறோம்.

சர்க்கார் அந்த அளவுக்கு காரியங்களைச் செய்திருக்கிறது. இங்கேதான் அதைச் செய்யமுடியும் என்ற அடிப்படையில் அவர்கள் கூறினார்கள். தமிழ்நாடு காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் புதுமுக வகுப்பில் இலவசக் கல்வி கொடுப்போம் என்று கூறப்பட்டது. அதைப்போல இந்த அரசு கல்வி துறையில் முன்னேற்றமான முயற்சிகளை எடுத்திருந்தால், உண்மையிலேயே எதிர்காலத்தில் அது நன்மை பயப்பதாக இருந்திருக்கும். இந்த அரசின் சிறப்பு உயர்வதற்கு வழி காட்டியதாக இருந்திருக்கும்.

இப்போது நம்முடைய முதலமைச்சர்கூட கூறியிருக்கிறார்கள். உணவு அபிவிருத்தியைப்பற்றி சொல்லும்போது எங்கெங்கே தரிசு நிலங்கள் இருக்கின்றனவோ அவைகளை எல்லாம் நிலம் இல்லாதவர்களுக்கு வினியோகித்து சாகுபடிக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். கலெக்டருக்கு அது சம்பந்தமான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருப்பதாக தெரிகிறது. இம்மாதிரி சர்க்கார் நிலங்களை வினியோகம் செய்வதில் பல இடங்களில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு உதவி செய்யக்கூடிய நிலைமையில் பாரபட்சமாக அவை செய்யப்படுகின்றன என்பதாக பல இடங்களில் இருந்து தகவல் வந்து கொண்டிருக்கிறது. இதுவரையில் நிலங்கள் வினியோகிக்கப்படாமல் கூட இருக்கலாம்.

திரு. சி. பி. சிற்றரசு : திரு. அய்யாசாமி அவர்கள் எந்தெந்த இடங்களில் அப்படி ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு கொடுத்திருக்கிறார்கள் என்ற விவரத்தைச் சொல்வார்களா ?

திரு. எம். அய்யாசாமி : இதுவரையில் நிலங்கள் வினியோகம் நடைபெறுமல் கூட இருந்திருக்கலாம் என்று முன்னதாகவே கூறினேன். அந்த அளவுக்கு புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. அமைச்சர்கள் தகுந்த முறையில் அதைக் கவனிக்க வேண்டும். மாவட்ட அளவில் எல்லாக் கட்சிக்காரர்களையும் கொண்ட கமிட்டி அமைத்து பாரபட்சம் இல்லாத அளவுக்கு அமைச்சரவை அதைச் செய்தால் நலமாக இருக்கும்.

மின்சார பம்பு செட்டுகளுக்கு அதிகப்படியாக மின்சார இணைப்பு கொடுக்கும் ஏற்பாடு இருப்பதாக வரவு செலவு அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. மின்சார இணைப்பு கொடுப்பது ஒருபுறம் இருந்தாலும் ஏற்கனவே விவசாயிகளிடத்தில் ஒரு குறையிருக்கிறது. விவசாயிகள் கட்டக்கூடிய மின்சாரக் கட்டணம் ஞாபக மறதியினாலோ அல்லது வேறு அலுவல்களினாலோ கட்டமுடியாமல் போனால், இத்தனை நாளைக்குள் அதைக் கட்ட வேண்டுமென்று எந்தவித முன்னறிவிப்போ நோட்டீசோ இல்லாமல் திடீரென்று வந்து மின்சார இணைப்பை துண்டித்துவிட்டுப் போய்விடுகிறார்கள். அதனால் தண்ணீர் இறைக்க வேண்டிய நிர்ப்பந்தமான நேரங்களில் அவர்கள் சிரமப்படவேண்டியிருக்கிறது. அவர்கள் கட்டவேண்டிய பாக்கியை உடனே போய் செலுத்திவிட்டாலும் கூட, மீண்டும் மின்சார இணைப்பு அவர்களுக்கு வருவதற்கு அதிக சிரமமும் காலதாமதமும் ஆகிறது. அதனால் பயிர்கள் தண்ணீர் இல்லாமல் காய்ந்துபோகிற நிலைமையும் ஏற்படுகிறது. பல விவசாயிகள் என்னிடத்தில் வந்து இந்தக் குறையை எடுத்துச் சொல்ல வேண்டு

6th March 1968] [திரு. எம். அய்யாசாமி]

மென்று கூறுகிறார்கள். அதனால் மின்சாரக் கட்டணம் செலுத்துவதற்கு தாமதம் ஏற்பட்டால் டிஸ்கனெக்ஷன் நோட்டீஸ் கொடுக்காமல் இணைப்பை வெட்டுகிற நிலைமையை உடனே மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எங்கள் சமூகத்தைப் பொருத்தவரையில் ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் பலவிதமான புகார்கள் வந்துகொண்டேயிருக்கின்றன. செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொருத்தவரையில் சில கிராமங்களில் பரம்பரையாக இந்தச் சமூகத்தினருக்கு விடப்பட்ட மானிய நிலங்களை எல்லாம் இப்போது சர்க்கார் தரிசு என்று மாற்றியிருக்கிறார்கள். அதைப்பற்றி எத்தனையோ மனுக்கள் சர்க்காரிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பதிலே இல்லை என்று சொல்கிறார்கள். இந்தப் புகார் அதிகமாக செங்கற்பட்டு, தென்னற்காடு ஆகிய மாவட்டங்களிலிருந்து என்னிடத்தில் வந்திருக்கின்றன.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படிப்பட்ட நிலைமைகள் எந்த ஆண்டிலிருந்து நடைபெறுகிறது? புதிய சர்க்கார் வந்ததற்குப் பிறகா அல்லது முன்பிருந்தா? அப்படிப்பட்ட புகார்களை கனம் உறுப்பினர் அவர்கள் இந்த தனைத்திற்கோ அல்லது அரசாங்கத்திற்கோ எழுதி அனுப்பத் தயாராக இருக்கிறாரா? இருந்தால் இந்த அரசாங்கம் தீவிரமாகவும் மிகுந்த அனுதாபத்தோடும் அவற்றைக் கவனிப்பதற்குத் தயாராக இருக்கிறது.

திரு. எம். அய்யாசாமி : எந்த அரசாங்கம் என்பதில்லை. இப்போது சமீபத்தில் அவர்கள் இது சம்பந்தமாக முறையிட்டிருக்கிறார்கள். ஜமீன் நிலங்களை அயன் நிலங்களாக மாற்றுவதற்கு செட்டில்மெண்ட் சம்பந்தப்பட்ட தாசில்தார், செங்கற்பட்டு மாவட்டத்தில் காஞ்சிபுரம் தாலூகாவில் செய்கிறார். நான் சமீபத்தில் அங்கே போயிருந்தபோது தகராறு என்று சொல்லி அது குறித்து மனு கொடுத்திருக்கிறார்கள். அதனுடைய காப்பியை என்னிடம் கொடுத்தார்கள். அதை அமைச்சரிடத்தில் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். இது நடந்தது இப்போது பத்து பதினைந்து நாட்களுக்குள். இதைப்போல பல புகார்கள் வருகின்றன. கிராமங்களில் குறைந்த கூலிக்கு வேலை செய்கிறவர்கள் இந்த சமூகத்தை சேர்ந்தவர்கள் என்ற காரணத்தால் அந்தக் காலத்தில் பூமியை அவர்களுக்கு மானியமாக விட்டிருக்கிறார்கள் இப்போது அவற்றை சர்க்கார் தரிசு என்று மாற்றி வேறு யாருக்கோ கொடுப்பதற்கு சிறிய அதிகாரிகள் முயற்சி செய்துவருகிறார்கள், என்று சொல்லப்படுகிறது. மிகப் பின்தங்கிய மருத்துவர், சலவையாளர் பிரசினைகள் மிகவும் மைனாரிடி சமூகத்தவர் என்ற முறையில் அனுதாபத்தோடு கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

6-00 p.m.

VICE-CHAIRMAN (THIRU N. V. NATARAJAN) : மன்றம் இத்துடன் கலைந்து நாளை பிற்பகல் 3 மணிக்கு மீண்டும் கூடும்.

The House then adjourned.

6-08 p.m.

IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

122. Notification issued with G.O. P. No. 2079, Revenue, dated 27th November 1967, exempting from liability to tax the sales of spinning and other crafts,equipments and spare parts by Gandhigram Khadi department, Madurai District; and its authorised agents. [*Laid on the Table of the House under section* 53 (5) *of the Madras General Sales Tax Act*, 1959 (*Madras Act* 1 *of* 1959).]

[6th March 1968

123. Notification issued with G.O. Ms. No. 2073, Rural Development and Local Administration, dated 13th November 1967, regarding postponement of quinquennial revision work till 31st March1969 in certain Municipalities specified in the schedule and in respect of the Kodaikanal Township Committee. [*Laid on the Table of the House under section* 304 (*d*) *of the Madras District Municipalities Act*, 1920 (*Madras Act V of* 1920.)]

124. Notification issued with G.O. P. No. 2010, Revenue, dated 17th November 1967 exempting from the liability to tax, the sales of Condoms [*Laid on the Table of the House under section* 53 (5) *of the Madras General Sales Tax Act*, 1959 (*Madras Act* 1 *of* 1959.)]

125. Notification issued with G.O. P. No. 2150, Revenue, dated 13th December 1967, exempting from liability to tax, the sales of handloom pillow covers. [*Laid on the Table of the House under section* 53 (5) *of the Madras General Sales Tax Act*, 1959 (*Madras Act* 1 *of* 1959.)]

B. Reports, Notifications and Other Papers.

Nil.

APPENDIX.

(*Vide* answer to Starred Question No. 186 on page 379.)

(அ) தமிழக அரசு பங்கீட்டிலிருந்து மோட்டார் வண்டிகள் வழங்கப்பட்ட சட்டமன்ற, சட்டசபை உறுப்பினர்கள்.

1. திரு. வி. ஆர். நெடுஞ்செழியன், எம்.எல்.ஏ.
2. திரு. ஆர். கிருஷ்ணசாமி கோபாலர், எம். எல். ஏ.
3. திரு. எ. டி. ஏ. பி. சுந்தரவேல், எம்.எல்.ஏ.
4. திரு. ப. உ. ஷண்முகம், எம். எல். ஏ.
5. திரு. பி. வெங்கடாசல தேவர், எம். எல். சி.
6. திரு. டி. கரிச்ச கவுடர், எம். எல். ஏ.
7. திரு. எ. பி. தர்மலிங்கம், எம். எல். ஏ.
8. திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரிப், எம். எல். ஏ.
9. திரு. பி. ஆர். சீனுவாச படையாச்சி, எம். எல். ஏ.
10. திரு. எம். கருணாநிதி, எம். எல். ஏ.
11. திரு. கே. மாரப்ப கவுண்டர், எம். எல். ஏ.
12. திரு. என். சவுந்தரபாண்டியன், எம். எல். ஏ.
13. திரு. கே. அன்பழகன், எம். எல். சி.
14. திரு. எம். தண்டாயுதபாணி, எம். எல். ஏ.
15. திரு. இராம அரங்கண்ணல், எம். எல். ஏ.
16. திரு. ஆர். கோவிந்தராஜுலு நாயுடு, எம். எல். ஏ.
17. திரு. ஜி. ராஜாராம், எம். எல். ஏ.
18. திரு. எ. ராகவ ரெட்டி, எம். எல். ஏ.
19. திரு. கே. பாலசுப்பிரமணிய ஐயர், எம். எல். சி.
20. திரு. ஜே. பொன்னுசாமி வில்லவராயர், எம். எல். ஏ.

21. திரு. ஆர். அப்துல் கலீல், எம். எல். ஏ.
22. திரு. கே. எம். கிருஷ்ணசாமி, எம். எல். ஏ.
23. திரு. ஏ. ஆர். ராமசுவாமி, எம். எல். ஏ.
24. திரு. எஸ். மாதவன், எம். எல். ஏ.
25. திரு. கே. என். பழனிசுவாமி கவுண்டர், எம். எல். ஏ.
26. திரு. ஏ. துரைஅரசன், எம். எல். ஏ.
27. திரு. ஏ. பி. பாலகன், எம். எல். ஏ.
28. திரு. கே. கோபால கவுண்டர், எம்.எல்.ஏ.
29. திரு. ஏ. ரத்னவேல் கவுண்டர், எம். எல். ஏ.
30. திரு. ஆர். ராஜகோபாலசுவாமி, எம். எல். ஏ.
31. திரு. என். ராமசுவாமி உடையார், எம். எல். ஏ.
32. திரு. டாக்டர் பி. நடராஜன், எம். எல். ஏ.
33. திருமதி சி. குழந்தை அம்மாள், எம்.எல். ஏ.
34. திரு. கே. டி. கோசல்ராம், எம். எல். ஏ.
35. புலவர் கே. கோவிந்தன், எம். எல். ஏ.
36. திரு. என். எஸ். சுந்தரராஜன், எம். எல். ஏ.
37. திரு. பி. வி. ஸ்ரீராமுலு, எம். எல். ஏ.
38. திரு. சி. சினிவாசன், எம். எல். ஏ.
39. திரு. ஏ. சாம்பசிவ செட்டியார், எம். எல். சி.
40. திரு. ஏ. பி. சி. வீரபாகு, எம். எல். ஏ.
41. திரு. எஸ். வி. லட்சுமணன், எம். எல். சி.
42. திரு. சா. கணேசன், எம். எல். ஏ.
43. திரு. டி. எம். காளியண்ணன், எம். எல். ஏ.
44. திரு. டி. எஸ். அருணாசலம், எம். எல். சி.
45. திரு. கே. கோவிந்தராஜுலு, எம். எல். ஏ.
46. திரு. எஸ். ராமச்சந்திரன், எம். எல். ஏ.
47. திரு. எஸ். முருகையன், எம். எல். ஏ.
48. திரு. சி. கிருஷ்ணமூர்த்தி, எம். எல். ஏ.
49. திரு. டி. ராஜரத்தினம், எம். எல். ஏ.
50. திரு. ஏ. பி. அரசு, எம். எல். ஏ.
51. திரு. எம். சி. பாலன், எம். எல். ஏ.
52. திரு. கே. முருகேசன், எம். எல். ஏ.
53. திரு. எம். சண்முகம், எம். எல். ஏ.
54. திரு. டி. பி. அழகமுத்து, எம். எல். ஏ.
55. திரு. எஸ். கணேசன், எம். எல். ஏ.
56. திரு. வி. முனுசாமி, எம். எல். ஏ.

(இ) தமிழக அரசு பங்கீட்டிலிருந்து மோட்டார் வண்டிகள் வழங்கப்படாத சட்டமன்ற, சட்டசபை உறுப்பினர்கள்.

1. திரு. கே. கோதண்டராம கவுண்டர், எம். எல். சி.
2. திரு. கே. எஸ். அப்துல் வகாப், எம். எல். சி.
3. திரு. ஆர். தங்கவேலு, எம். எல். ஏ.
4. திரு. கே. திருப்பதி, எம். எல். ஏ.
5. திரு. சி. வி. ராஜகோபால், எம். எல். சி.

6. திரு. வி. எ. முத்தையா, எம். எல். ஏ.
7. திருமதி பார்வதி அர்ஜுனன், எம். எல். ஏ.
8. திரு. ஆர். செங்காளியப்பன், எம். எல். ஏ.
9. திரு. வி. எல்லம்ம நாயுடு, எம். எல். ஏ.
10. திரு. பி. முருகையன், எம். எல். ஏ.
11. திரு. வி. அருணாசலம், எம். எல். ஏ.
12. திரு. என். பி. எம். சின்னையா கவுண்டர், எம். எல். ஏ.
13. திரு. கே. எஸ். மணி, எம். எல். ஏ.
14. திரு. என். ஆர். தியாகராஜன், எம். எல். சி.
15. திரு. எம். பி. வடிவேலு, எம். எல். ஏ.
16. திரு. வி. கிருஷ்ணமூர்த்தி, எம். எல். ஏ.
17. திரு. எஸ். பொன்னுசாமி, எம். எல். ஏ.
18. திரு. பி. ஊர்க்காவலன், எம். எல். ஏ.
19. திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம், எம். எல். ஏ.
20. திரு. எஸ். அங்கமுத்து நாயக்கர், எம். எல். ஏ.
21. திரு. எஸ். சங்கிலி, எம். எல். ஏ.
22. திரு. ஆர். ஜீவரத்தினம், எம். எல். ஏ.
23. திரு. எம். கண்ணப்பன், எம். எல். ஏ.
24. திரு. கே. ராமமூர்த்தி, எம். எல். ஏ.
25. திரு. எம். சங்கரலிங்கம், எம். எல். சி.
26. திரு. எம். வேதாசலம், எம். எல். ஏ.
27. திரு. எஸ். துரைசாமி, எம். எல். ஏ.
28. திரு. பி. என். பரமசிவ கவுண்டர், எம். எல். ஏ.
29. திரு. இ. எம். நடராஜன், எம். எல். ஏ.
30. திரு. எஸ். ஆர். வடிவேலு, எம். எல். ஏ.
31. திரு. எம். ஜெங்கல் ரெட்டியார், எம். எல். சி.
32. திரு. எம். ராஜாங்கம், எம். எல். ஏ.
33. திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார், எம். எல். ஏ.
34. திரு. எஸ். ராஜமார்த்தாண்டம், எம். எல். சி.
35. திரு. எஸ். கோவிந்தராஜன், எம். எல். ஏ.
36. திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர், எம். எல். ஏ.
37. திரு. வி. கே. கோதண்டராமன், எம். எல். ஏ.
38. திரு. டி. சந்தோஷம், எம். எல். சி.
39. திரு. எல். பலராமன், எம். எல். ஏ.
40. திரு. டி. கேசவலு, எம். எல். ஏ.
41. திரு. டி. பி. துரைராஜ், எம். எல். ஏ.